# இணுவில் ஒலி

## இரு திங்கள் ஏடு




தை - மாசி 2013 பொங்கல் மலர் விலை ரூபா 50/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
எமது இனிய தைப்பொங்கல் நல்வாழ்த்துக்கள்!

# Jaffna Service Station
# Trinco Service Station
# &
# Wheel Alignment




***Managing Director***
**T.Pushkaran**




Kaithadi Road, Maruthanarmadam, Inuvil, Chunnakam
Tel: 021 3202133, Mobile : 0773783840, Fax: 021-2241955

182, Lower Road, Orr's Hill, Trincomalle.
Tel : 026-3265137, Mobile 0773783840, Fax 026-2220779

E-mail : pushky79@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும்
நற்றவ வானிலும் நனி சிறந்தனவே”

# ‘இணுவில் ஒலி’

(தாயக மண்ணின் தனித்துவம் காக்கும் இருதிங்கள் ஏடு)

வள்ளுவர் ஆண்டு 2044 தை-மாசி 2013 வில் - 1 ஒலி - 3

**நிறுவுனர்/காப்பாளர்**
நடராசா சச்சிதானந்தன்

**ஆசிரியர்:**
த.சிவசுப்பிரமணியம் ( தம்பு சிவா )
தொ.பேசி : 071 8676482

**நிர்வாக ஆசிரியர்:**
சிவலிங்கம் சரவணபவன்
தொ.பேசி: 077 3126802

**சஞ்சிகைக் குழு :**
மூ.சிவலிங்கம்
கா.வைத்தீஸ்வரன்
பேராசிரியர் க.தேவராஜா
திருமதி க.வைகுந்தம்
சு.சண்முககுமார்
மா.ந.பரமேஸ்வரன்
சு.பரமேஸ்வரலிங்கம்
க.பரமேஸ்வரன்
க.கண்ணபிரான்
திருமதி க.கிருஸ்ணபிள்ளை
அ.குகதாசன்
ம.காண்டீபன்
சொ.ஹரிசங்கர்
தே.சதீசன்
பி.அஜந்தன்
யோ.சுதந்திரன்

**வெளிநாட்டுப் பிரதிநிதிகள்:**
இலண்டன் : சபேசன் சண்முகநாதன்
அவுஸ்திரேலியா : தி.திருநந்தகுமார்
கனடா : ம.இராஜகுலசூரியர்
ஜேர்மனி : ஆ.வடிவேற்கரசன்
டென்மார்க் : கனேசு பரமநாதன்
சுவிஸ் : நட்ராஜா மனோகரன்
நோர்வே : நல்லையா சண்முகப்பிரபு
அமெரிக்கா : வே.பிரேமதயாளன்

**தொடர்பு :**
9 –2/1, நெல்சன் இடம்,
கொழும்பு – 06, இலங்கை.
தொ.பேசி : 0114902406

47, கற்பகப்பிள்ளையார் கோவில் வீதி,
இளந்தாரி கோவிலடி, இணுவில் கிழக்கு,
சுன்னாகம், இலங்கை.

**E-Mail : inuviloli@hotmail.com**

படைப்புகளுக்குப் படைப்பளிகளே பொறுப்புடையவர்கள்.
ஆக்கங்கள் செம்மை பார்த்தபின் பிரசுரமாகும்.
–ஆசிரியர்–

## உள்ளே ஒலிப்பவை

| | பக்கம் |
|---|---|
| பேனா முனையிலிருந்து..... | 02 |
| நிறுவுனரிடமிருந்து..... | 31 |
| **கட்டுரை :** | |
| • தவிலின் தனித்துவமான மேதை தட்சணாமூர்த்தி | 03 |
| • இலக்கியங்கள் நிலைபெறப் பணியாற்றிய சான்றோர்கள் | 08 |
| • வாசிப்பின் முக்கியத்துவம் | 10 |
| • தமிழ் மொழியின் பெருமையை உலகறியச் செய்த தனிநாயகம் அடிகளார் | 16 |
| • நாடகத்தில் மொழியும் வசனமும் | 24 |
| • முற்போக்கு இலக்கியம் | 30 |
| • குழந்தையினுடைய கல்வி வளர்ச்சியில் பரம்பரையும் சூழலும் | 32 |
| **மங்கையர் மாண்பு:** | |
| • பாரம்பரிய கலைவளர்ச்சியில் பெண்களின் பங்களிப்பு | 38 |
| **கவிதை:** | |
| • பொங்கலோ பொங்கல் | 06 |
| • இணுவில் ஒலி ஒலிக்கிறது | 09 |
| • சூரிய உதயம் | 40 |
| **சிறுகதை:** | |
| • பயணம் | 11 |
| • ஸ்பெஷல் ஊசி (குட்டிக்கதை ) | 19 |
| **பண்பாட்டுப்பாரம்பரியம் :** | |
| • தமிழர் பண்பாடும் தைப்பொங்கலும் | 27 |
| **திறனாய்வு:** | |
| • அவளுக்கென்று ஒரு மனம் | 29 |
| **மாணவர் உலகம்:** | |
| • ஊக்கம் கொடுப்போம் | 20 |
| • கல்வியின் சிறப்பு | 21 |
| • ஒளியூட்டும் ஆசிரியர் | 22 |
| • சூழல் மாசடைதல் | 23 |
| **உங்கள் விருந்து:** | 26 |
| **ஏனையவை:** | |
| • அறிந்தவையும் தெரிந்தவையும் | 14 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேனா முனையிலிருந்து .....

உலகிலுள்ள ஐம்பத்திரண்டு நாடுகளில் தமிழ்மொழி பேசப்பட்டு வருவதாகவும், இலங்கையிலிருந்து சுமார் எட்டு இலட்சம் தமிழர்கள் புலம்பெயர்ந்து வேற்று நாடுகளில் வசித்து வருவதாகவும் ஊடகங்கள் திரட்டிய புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன. எது எப்படி இருந்த போதிலும் கணிசமான தொகையினர் கனடா, இங்கிலாந்து, ஜேர்மனி, பிரான்ஸ், சுவிற்சலாந்து, அவுஸ்திரேலியா, நோர்வே, டென்மார்க், அமெரிக்கா, நியூசிலாந்து ஆகிய நாடுகளில் வாழ்கின்றார்கள். அவர்களில் ஒரு பகுதியினர் அந்தந்த நாடுகளில் வாழ்வதற்கான உரிமையைப் பெற்று நிரந்தர குடிகளாக வாழ்ந்து வருகின்றனர்.

இலங்கைத் தமிழர்கள் எண்பதுகளுக்குப் பின்னர் இன முரண்பாட்டு நெருக்கடியில் ஏற்பட்ட உயிர் வாழ்வதற்கான அச்சநிலை காரணமாகவும், சிலர் பொருளாதார நோக்கங்களோடும் புலம்பெயர்ந்து இந்தியா உட்பட உலகின் பல நாடுகளுக்கும் சென்றனர். இந்தியாவைத் தவிர மற்றைய எல்லா நாடுகளிலும் அந்த நாடுகளின் மொழிகளையே பேச வேண்டிய நிலையில் உள்ளனர். இருப்பினும் தமிழ்மொழியையும், தமிழர் கலாசாரத்தையும் காப்பாற்றிக் கொள்வதற்கான வேலைத் திட்டங்களை உருவாக்கிச் செயற்பட்டும் வருகின்றனர்.

ஆயினும் இந்நிலை எவ்வளவு காலத்துக்கு நீடிக்கப் போகிறது? காலப் போக்கில் அந்தத் தமிழர்களும் தாய் மொழியை மறந்து விடுவார்களா? - என்ற ஐயப்பாடு இல்லாமலும் இல்லை. இருந்த போதிலும் முக்கிய சில நாடுகளில் தமிழ்ப் பாடசாலைகளையும் கலைக் கூடங்களையும் நிறுவி தமிழ் மொழியையும், இசை, பரதம்,வாத்தியம் போன்ற கலைகளையும் நம்மவர்கள் வளர்த்து வருகின்றார்கள். இது ஆரோக்கியமான செயற்பாடாகும்.


புலம்பெயர் உறவுகளுக்கும், தாயக உறவுகளுக்கும் இப்பொழுது காணப்படுகின்ற நேச உறவுகள் தொடர்ந்தும் நீடிப்பதே ஆரோக்கியமானதாகும். மண்ணையும் மக்களையும் நேசிப்பதன் மூலம் தாயகப் பற்றைத் தக்க வைத்துக் கொள்ளமுடியும். புலம்பெயர் நாடுகளிலுள்ள இளந் தலைமுறையினர் மற்றும் அடுத்து வரும் தலைமுறையினர் மத்தியில் தாயகம் பற்றிய தெளிவான கருதுருவாக்கம் ஏற்படுத்தப்படுவதுடன், தாயகத்திலுள்ள இளந் தலைமுறையினரும் புலம்பெயர் நாடுகளின் உறவுகளுடைய வாழ்வுநிலை பற்றிய தெளிவான விளக்கத்தைப் பெற்றுக் கொள்வதும் காலத்தின் தேவையாகும். தாயக உறவுகளுக்கும் புலம்பெயர் உறவுகளுக்குமான ஓர் இணக்கப்பாட்டை உருவாக்குவதன் மூலமாக தமிழ் மொழியையும் கலை கலாசாரங்களையும் வளர்த்துக்கொள்ளமுடியும். அதற்கான உந்து சக்தியாக *'இணுவில் ஒலி'* செயற்படத் தயாராக இருக்கின்றது. இந்தக் கைங்கரியத்திற்கு நாமும் நம் உறவுகளும் கைகோத்து ஆக்கபூர்வமான பணியினை மேற்கொள்ளத் தமிழர் திருநாளாம் தைப்பொங்கலுடன் சங்கற்பம் பூணுவோம்.அனைவருக்கும் பொங்கல் திருநாள் நல்வாழ்த்துக்கள்.

மீண்டும் அடுத்த இதழில் சந்திப்போம்.

**- ஆசிரியர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தவிலின் தனித்துவமான சொற்கட்டுக்களை வெளிப்படுத்திய மேதை தட்செணாமூர்த்தி



■ பேராசிரியர் சபா.ஜெயராசா

*"விதிவழி மறையவர் மிழலை யுளீர்*
*நடம்*
*சதிவழி வருவதோர் சதிரே*
*சதிவழி வருவதோர் சதிருடை யீருமை*
*அதிகுணம் புகழ்வது மழகே"*
*(சம்பந்தர் - 3-98:2)*

முழவுச் சொற்கட்டுக்களை இங்கித மாக இசைக்கும் தவில் மரபு இந்தியா விலும் இலங்கையிலும் நெடிது வளர்ச்சி யுற்றிருந்தது. தவில் என்ற சொல் த்+இல் என விரியும் என பி.எம். சுந்தரம் (1996) குறிப் பிட்டுள்ளார். அதாவது, குற்றமில்லாத மாசற்ற வாத்தியம் என்பது அதன் பொருள் 'திருப்புகழ்', 'உமா மகேஸ்வர பாரதம்' முதலாம் நூல்களில் தவில் பற்றிய செய்தி கள் இடம்பெற்றுள்ளன.

தவிற்கலையை வரன் முறையாகக் கற்று ஆற்றுகை செய்த மேதைகளுள் விசு வலிங்கம் தட்செணாமூர்த்தி தனித்துவ மானவர். அவர் பிறந்தது இணுவையூர். திருமணம் செய்தது அளவெட்டியூர். அவரை இணுவையூர் தட்செணாமூர்த்தி என்றும் அளவெட்டித் தட்செணாமூர்த்தி என்றும் அழைப்பர். மரபுவழியான இசைப் பாரம்பரியத்தின் குடும்பப் பின்புலம் அவ ரது ஆற்றலுக்குரிய விசையைக் கொடுத் தது.

தந்தையே அவரது முதற்குருவாக விளங்கினார். அடிப்படைகளைத் தமது தந்தையாரிடம் கற்றுக்கொண்ட அவர் இணுவிலில் வாழ்ந்த பெருங்கலைஞர் களுள் ஒருவராகிய சின்னத்தம்பிப்பிள்ளை என்பாரிடம் மேலும் விரிவாகவும் ஆழமாக வும் தவிற்கலையைக் கற்றுக்கொண்டார். கலையார்வமும், விடாமுயற்சியும்கொண்ட

வளப் பெருக்குடனும் வழிபாட்டுடனும் இணைந்த மங்கல வாத்தியங்களாகத் தவிலும் நாகசுரமும் விளங்குகின்றன. 'நல்லூர் அரசின் நர்த்தன வாத்தியம்' என்று தவிலையும் நாக சுரத்தையும் இணு வைச் சின்னத்தம்பிப் புலவர் குறிப்பிட் டுள்ளார். பெரு வாத்தியம், பெரிய மேளம், அரச வாத்தியம், சுமங்கலி வாத்தியம் என் றும் அவை அழைப்படுதல் உண்டு. இங்கி தமான மனவெழுச்சிகளைத் தூண்டி நிற்பதனால் அவற்றைப் 'பூவாத்தியம்' என்றும் 'சாந்தி வாத்தியம்' என்றும் கிரா மத்தவர் அழைப்பர்.

கிராமத்து மக்களின் மனவெழுச்சி வெளிபாடுகளுக்கும் தவிலின் சொற்கட் டுக்களுக்குமிடையே ஒப்புமைகள் உண்டு. த,தி,தொம், நம், கிட, ஜம் என்ற அடிப் படைச் சொற்கட்டுக்களிலிருந்து விரிந்து நீண்டு, தொகுதிகளாகி, கோர்வைகளாகி, நெடுங்கோட்டுப் பாய்ச்சலுடன் செல்லும் சொற்கட்டுக்களை எடுத்தியம்பும் தோற கருவிகளிலே தவிலுக்குத் தனியிடம் உண்டு. சொற்கட்டுக்களைச் 'சதி' என்று கூறும் மரபு பல்லவர் காலத்தில் காணப்பட் டது. சதியைக் குறிக்கும் சம்பந்தர் தேவாரம் ஒன்று வருமாறு:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தட்செணாமூர்த்தி அவர்கள் நாளொன்றுக்கு பதினாறு மணிக்கு மேல் பயிற்சி செய்துகொண்டவர் என்று அவரின் மூத்த சகோதரர் உருத்திரபதி கூறியுள்ளார்.

அத்துடன் இணுவிலிலும் அதன் சுற்றுப் புறங்களிலும் உள்ள கோயில் விழாக்களில் தவிற்கச்சேரிகளைப் பார்த்து இலயநுட்பங்களை நேரில் அனுபவித்துக் கற்றுக்கொள்ளும் திறன் அவர் சிறுவராயிருந்த பொழுதே காணப்பட்டதாகத் தாயார் இரத்தினம்மாள் கூறியுள்ளார்.

தட்செணாமூர்த்தி அவர்களின் இலய ஆற்றல் விரிவும் முகிழ்ப்பும் கொண்டு மேலெழுவதற்கு இணுவிலின் கலைப்புலம் விசையாக அமைந்தது. அண்ணாவி ஏரம்பநாதர் (கலைச்செல்வர் சுப்பையாவின் தந்தையார்) அண்ணாவி ஆறுமுகம், அண்ணாவி நாகலிங்கம், அண்ணாவி தாமேதரம்பிள்ளை, அண்ணாவி முருகேசு போன்ற பல அண்ணாவிமார்கள் இணுவிலில் வாழ்ந்தார்கள். அவர்களின் கூத்துக்களிலே முழவுச் சொற்கட்டுக்கள் மிக நுட்பமாகப் பயன்படுத்தப்பட்டன. அத்துடன் இணுவில் கிரமாத்துக்கே உரிய தாளக் காவடி மரபு ஒன்றும் காணப்பட்டது. அவற்றுடனான ஊடாட்டங்கள், தட்செணாமூர்த்தி அவர்களின் தவில் வாசிப்பை மேலும் மெருகு பெறச் செய்தன.

தாளக் கடடுக்களை நிறைந்த புத்திசாலித்தனத்தோடு கணக்குப் பிசகாமல் வாசிக்கும் திறன் அவரிடத்துக் காணப்பட்டது. உருப்படிகளுக்குப் பொருத்தமான நுட்பமான வாசிப்பை முன்னெடுக்கும் கட்டுச்செட்டான திறன் அவருக்கே உரிய தனித்துவமாயிற்று. என்ன தாளத்திலும் என்ன வேகத்திலும் காலப் பிரமாணம் தவறாது வாசிக்கும் ஆற்றல் அவருக்கு இருந்தது. அவரின் இலய ஞானத்தை அறிந்து வியந்த நிலையில் " இலய ஞான குபேர பூபதி" என்ற பொருத்தமான விருது வழங்கப் பெற்றது.

தட்செணாமூர்தியின் மூளைவேகம், இலயக் கணிப்பு, கரங்களின் வேகம் ஆகியவை பிரமிப்பை உண்டாக்கும் வகையிலே செயற்பட்டுக் கொண்டிருக்கும். அது அவருக்கே உரிய தனித்துவமான ஆற்றலாகும்.

பல கலைஞர்கள் பல்வேறு சந்தர்ப்பங்களிலே தட்செணாமூர்த்தியுடன் இணைந்து தவில் வாசித்தனர். அவ்வகையில் தமிழகத்துக் கலைஞர்களாகிய நாச்சிமார் கோவில் இராகவப்பிள்ளை, திருவிழுந்தூர் இராமதாசபிள்ளை, வலங்கைமான் சண்முகசுந்தரம்பிள்ளை, கும்பகோணம் தங்கவேற்பிள்ளை, நீடாமங்கலம் சண்முக வடிவேல் முதலியோர் குறிப்பிடத்தக்கவர்கள். இலங்கையைச் சேர்ந்த பல முன்னணிக் கலைஞர்களும் அவருடன் இணைநது வாசித்துள்ளனர்.

அவ்வகையில் யாழ்ப்பாணம் காமாட்சி சுந்தரம்பிள்ளை, இணுவில் சின்னத்தம்பிப் பிள்ளை, நாச்சிமார் கோவில் கணேச பிள்ளை, இணுவில் என். ஆர்.சின்னராசா, இணுவில் கே.ஆர்.புண்ணியமூர்த்தி முதலியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

பெரும் நாகசுரக் கலைஞர்கள் தட்சணாமூர்த்தி அவர்கள் தமக்குத் தவில் வாசித்த வேளை அவரின் வாசிப்புப் புலமையைப் பாராட்டியுள்ளனர். அவ்வகையில் சீர்காழி திருநாவுக்கரசுப்பிள்ளை, திருவாவடுதுறை ராஜரத்தினம்பிள்ளை, திருவெண்காடு சுப்பிரமணியம்பிள்ளை, குழிக்கரைப் பிச்சையப்பா, கலைஞர் ஷேக் சின்ன மௌலானா, திருவிடை மருதூர் வீராசாமிப்பிள்ளை, தருமபுரம் கோவிந்தராஜபிள்ளை, வேதாரணியம் வேதமூர்த்தி, மதுரை சேதுராமன் ச்கோதரர்கள், அளவெட்டி எம்.பி.பாலகிருஷ்ணன், சாவகச்சேரி பஞ்சாபிகேசன், அளவெட்டி என்.கே. பத்மநாதன், இணுவில் என்.ஆர்.கோவிந்தசாமி, இணுவில் கே.ஆர்.சுந்தரமூர்த்தி, மாவிட்டபுரம் ராஜூ முதலியோர் குறிப்பி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டத்தக்கவர்கள்.

மனவெழுச்சிகளை மேலெழச் செய்யும் சொற்கட்டுகளை வாசிப்பதில் தட்செணாமூர்த்தி வல்லவராக விளங்கினார். மனவெழுச்சிகள் நேர்மனவெழுச்சிகள் என்றும் எதிர்மனவெழுச்சிகள் என்றும் பாகுபடுத்தப்படும். தெய்வீக மனவெழுச்சி நேர்மனவெழுச்சியாகும். அத்தகைய வாசிப்பை மேற்கொள்ளல் "பூ வாசிப்பு", "அர்ச்சனை வாசிப்பு", "சந்தன வாசிப்பு", "திருக்கட்டளை வாசிப்பு" என்ற பல பெயர்களால் அழைக்கப்படும். அவற்றைக் கையாளுவதில் வல்லவராக அவர் விளங்கினார். "அவரது கைகளிலே கடவுள் புகுந்துள்ளார்" என்று இயல் இசைவாரிதி வீரமணிஐயர் ஒரு சமயம் பாரட்டினார்.

தவில் வாசிப்பைப் "பேசுதல்" என்று சொல்லும் மரபு உண்டு. அவரது வாசிப்பை இறைவனின் பேச்சு என்று இரசிகர்கள் குறிப்பிட்டனர்.

உலகியல் நிலையில் மக்களின் உடல் உழைப்புக்கும் தவில் வாசிப்புக்கும் இணைந்த தொடர்புகள் உண்டு. தவிலின் சொற்கட்டுக்கள் கிராமிய உடலுழைப்பின் அசைவுகளை அலகிட்டுத் தொடர்புபடுத்தும் ஆற்றல் கொண்டவை. அதனால் தவில் கிராமத்தின் பெரு விருப்புக்குரிய வாத்தியமாக வளர்ச்சி கொண்டுள்ளது. அவற்றை இலாவகமாகவும் திட்பநுட்பமாகவும் எடுத்தாளும் ஆற்றல் தட்செணாமூர்த்தியிடத்துக் காணப்பட்டது.

அவரின் பிறிதொரு திறமை கிராமத்து ஒலிகளைத் தவிலின் வீச்சுக்குள் கொண்டு வந்தமையாகும். நீர்இறைத்தல், நீரோடுதல், வண்டி ஓடுதல், தோட்ட நிலம் கொத்துதல், தினைப்போர் அடித்தல் முதலிய தொழிற்பாட்டு ஒலிகளை அவர் தவில் ஒலியின் வீச்சுக்குள்ளே கொண்டு வந்தார் எனக் குறிப்பிடப்படுகின்றது.

இரவிரவாக அவர் நிகழ்த்திய வாசிப்பை கண்ணயராது கேட்டு மகிழ்ந்து சுவைத்த இரசிகர்களின் நினைவுகளிலும் கனவுகளிலும் தட்செணாமூர்த்தி நீடித்து நிற்கின்றார். இந்நாட்டின் கலைப் பெருமையைக் கடல் கடந்து தமிழகம் என்றும் நிலைபேறு கொள்ளச் செய்தவர்.


பெரும் கலைஞராக விளங்கிய பொழுதும், தன்னடக்கமும் அதேவேளை தற்றுணிவும் அவரது ஆளுமையின் பரிமாணங்களாகக் காணப்பட்டன. அவரின் தனித்துவமான பெரும் மரபினை பிள்ளைகள் முன்னெடுத்து வருதல் குறிப்பிடத்தக்கது.

தவில் நாகசுர வரலாற்றை எழுதும் பொழுதும் மீளநோக்கும் பொழுதும் தட்செணாமூர்த்தியின் பேராற்றல் முனைப்புடன் மேலெழுந்த வண்ணமிருக்கும். ●

# பொங்கல் வாழ்த்து

**வாசகப் பெருமக்கள், சந்தாதாரர்கள், விளம்பரதாரர்கள், நலன்விரும்பிகள் மற்றும் மாணவச் செல்வங்கள், படைப்பாளிகள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் தைப்பொங்கல் திருநாள் வாழ்த்துக்களை 'இணுவில் ஒலி' பெருமிதத்துடன் தெரிவித்துக் கொள்கிறது.**

"பொங்கும் மங்களம் எங்கும் பொங்குக!"





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொங்கலோ பொங்கல்



பொங்கலோ பொங்கவெனப் பூரித்தென்றும்
பொன்விளையும் பூமிதரு சென்னெ லிட்டுச்
சிங்கார மங்கையரு மாடவருஞ் செல்வச்
சிறுவரொடு சிறுமியருஞ் சேர்ந்து நின்று
மங்காத வளங்காக்கு முழவர் இந்த
மாநிலத்தி லுயர்கவென மகிழ்ந்து வாழ்த்திச்
செங்கதிரோன் தனைவாழ்த்திச் செம்மை நல்கும்
சிவனருளை வாழ்த்தி நாம் பொங்குவோமே.

பால் பொங்கப் பழம்பிழந்த சாறு பொங்கப்
பருப்போடு பயறு சேர்ந்தரிசி பொங்க
சேல்தங்கி விளையாடு கழனி சூழ்ந்த
செஞ்சோலைப் பூந்தேனும் சேர்ந்து பொங்க
கோல் தாங்கு மன்னரொடு மக்கள் தங்கள்
கொடும்பசியின் பிணி தீரக் குவலயத்தே
ஏர்தாங்கும் உழவர் மனம் இனிது பொங்க
இன்பமே சூழ்கவெனப் பொங்குவோமே.

வெண் துகிலை விரித்துயர்த்திப் பந்தலிட்டு
வித விதமாய் மலர் மாலை தொங்கவிட்டு
கண்டு நறுந் தேன் பாலும் பழமும் சேர்த்து
அண்டர்களு முண்டறியா அமுதம் பொங்கி
கொண்டாடுஞ் சுற்றமொடு மனைவி மக்கள்
குதுகலித்து ஈசனுக்கு படைக்கும் போது
எண்டிசையும் அறம்பொங்கி அன்பும் பொங்க
எவ்வுயிரும் வாழ்வதற்குப் பொங்குவோமே.

உண்டி கொடுத் துயிர் கொடுக்கு முழவர் தம்மை
உயர்வாக மதிக்கின்ற உலகர் தங்கள்
நன்றி மறவாமைதனை நயந்து காட்டி
நல்லதொரு தைத்திங்கள் தன்னிலின்பப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்டமொடு பாற்பொங்கல் படைப்பதற்குப்
பாரறியப் பலர் புகழப் பொங்குகின்றார்
உண்டு மனங்களிக்கின்ற உலகே! இந்த
உழவருளங் களிக்க நாம் பொங்குவோமே.



ஏர் கொண்டு போராடும் உழவர் தங்கள்
இன்னல்தனை மறந்தின்ப மெய்தி நின்று
சீர் கண்டு தான் பெற்ற செந்நெல் கொண்டு
செங்கதிரோன் தனைவாழ்த்திச் சிந்தை பொங்க
கார்கொண்டு தருகின்ற கருவூலங்கள்
கழனியெலாம் விளைவித்துக் கருணை செய்து
பார் உண்டு மகிழவைக்கும் பண்பு கண்டு
பரம்பொருளை வாழ்த்தி நாம் பொங்குவோமே

ஆழிமிசைச் சென்று சிலர் செல்வம் சேர்ப்பார்
அருங்கலைகள் கற்பித்துச் செல்வங் கொள்வார்
ஏழிசையாற் சிலர் சேர்ப்பர் செல்வந்தன்னை
எழுது வினை செய்து பலர் செல்வங் கொள்வார்
கோழைபடாச் செல்வமெனக் குவலயத்தோர்
கொண்டாடும் செல்வமது உழவர் கையின்
மேழிதரு செல்வமதே மேன்மைச் செல்வம்
மேதினிமேற் பொங்குகவே மேழிச் செல்வம்.

■ இ.வாசுதேவ்.

# மாணவர்களுக்கான கட்டுரைப் போட்டி

**இப்போட்டி மூன்று பிரிவுகளாக நடத்தப்படும்**

01) கீழ்ப்பிரிவு (10 வயதுக்குள்)
02) மத்திய பிரிவு (11 – 15 வயது வரை)
03) மேற்பிரிவு (16 –20 வயது வரை)

**கட்டுரைத் தலைப்புகள்**

01) கீழ்ப்பிரிவு – **'நான் விரும்பும் பெரியார்"(150 சொற்கள்)**
02) மத்திய பிரிவு – **இயற்கை வளங்களைப் பாதுகாப்போம்" (300 சொற்கள்)**
03) மேற்பிரிவு – **'இன்றைய மாணவர்கள் எதிர்நோக்கும் சவால்களும் அதற்கான தீர்வுகளும்" (நான்கு புல்ஸ்காப் தாள்)**

கட்டுரைகள் யாவும் பாடசாலை அதிபர் ஊடாக 28.02.2013 இற்கு முன் கிடைக்கக் கூடியதாக கட்டுரைப் போட்டி, 'இணுவில் ஒலி', 9-2/1 நெல்சன் இடம், கொழும்பு – 06 **('Inuvil oli', 9-2/1 Nelson Place, Colombo - 06, Srilanka)** என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்படவேண்டும்.

- சிறந்த கட்டுரையாளர்களுக்கு விருதுகளும் சான்றிதழ்களும் வழங்கப்படும்.
- மாணவச் செல்வங்களே! உங்கள் ஆற்றல்களை வெளிப்படுத்தப் போட்டியிலே கலந்துகொள்ளுங்கள்.
- புலம்பெயர்ந்த நாடுகளில் வாழும் மாணவர்களும் தாங்கள் கல்வி கற்கும் தமிழ்ப் பாடசாலை மூலமாக பங்குகொள்ளலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாற்றுப் பதிவில் எமது இலக்கியங்கள் நிலைபெறப் பணியாற்றிய சான்றோர்கள்

**தேடலோன்**

ஐரோப்பிய மறுமலர்ச்சிக் கால அனுபவங்களும், அறிவொளிக் காலச் சிந்தனைகளும், தொன்மையான பனுவல்களையும் நாட்டார் இலக்கியங்களையும் மீட்டெடுக்கும் செயற்பாடுகளுக்கு விசையூட்டின. **பனுவல்களைப் பதிப்பித்தல் முதலாவதாக இடம்பெற்ற செயற்பாடாயிற்று.** வெவ்வியல் மீட்போடு இணைந்ததாக ஏட்டுச் சுவடிகளை அச்சுப் பதிப்புக்கு ஏற்றும் முன்னோடி நடவடிக்கைகள் பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இடம்பெறலாயின.



நம் நாட்டவர்களான ஆறுமுகநாவலர் (1822 – 1879), சி.வை. தாமோதரம்பிள்ளை (1832 – 1901) ஆகியோருடன், உ.வே.சாமிநாதையர் (1855 – 1943) அவர்களும் ஏட்டுச் சுவடிகளை அச்சுவாகனம் ஏற்றும் பணிகளில் சிறப்பாக ஈடுபடலாயினர். பழைய தமிழ் நூல்களை அச்சேற்றும் பொழுது கிடைக்கப்பெற்ற ஏட்டுப் பிரதிகளை ஒப்பு நோக்கியும், பரிசீலித்தும், நூலாசிரியரது ஏனைய நூல்களைத் தொடர்புபடுத்தித் தீர்மானங்களை மேற்கொண்டும் முன்னெடுக்கப்பட்ட புலமைப் பயிற்சி நூலியத் திறனாவைத் தமிழில் நிலைகொள்ள வைத்தது.

பதிப்புத்துறையிலும் நூலியத் திறனாய்விலும் ஆறுமுகநாவலருக்குரிய தனித்துவம் அவருக்குரிய தமிழ், ஆங்கிலம் மற்றும் சமஸ்கிருதம் ஆகிய மொழியாற்றல்களினாலும் அறிவொழுக்க ஆளுமையினாலும் மேலெழுகின்றன. அறிவொழுக்கம் என்பது விதிக்கப்பட்ட கல்வி ஒழுக்கங்களை வழுவாது கடைப்பிடித்தலாகும். அவர் வெளியிட்ட சிவாலய தரிசன விதி, நித்திய கரும விதி, புட்பவிதி முதலியவை விதி வழி நின்றொழுகும் வாழ்க்கையை வலியுறுத்தின. அந்த ஒழுக்கத்தை அவர் தமது பதிப்பு முயற்சிகளிலும் மேற்கொண்டார்.

பதினோராந் திருமுறை, திருவாசகம், அகத்தியர் தேவாரத் திரட்டு, பெரியபுராணம், கந்தபுராணம், சேதுபுராணம், திருக்குறள் பரிமேலழகர் உரை, தொல்காப்பியம் சேனாவரையர் உரை, தொல்காப்பிய சூத்திரவிருத்தி, நன்னூல் விருத்தி, சூடாமணி, நிகண்டு, சிவஞானபோதம் முத லியவற்றையும் பதிப்பித்துள்ளார். நூற் பதிப்பின் வளர்ச்சி, நூலியத் திறனாய்வின் முன்னேற்றம் முதலியவை இலக்கிய வர லாறு, கால ஆராய்ச்சி முதலாம் முயற்சி களுக்கு இட்டுச் செல்ல வழிவகுத்தன.



சி.வை.தாமோதரம்பிள்ளையவர்கள் பெற்றுக்கொண்ட ஆழ்ந்த ஆங்கில அறிவு அவருடைய பதிப்புரைகளிலும், முன்னுரைகளிலும் வெளிப்படுத்தப்படுகின்றன. செவ்விய நூலியத் திறனாய்வு மரபை தமிழில் முன்னெடுத்தவராக அவர் மதிக்கப்படுகின்றார். ஏட்டுச்சுவடிகள் பலவற்றை ஒப்புநோக்கியும், பரிசோதித்தும் 1887 ஆம் ஆண்டில் சீவகசிந்தா மணியை நச்சினார்க்கினியர்

உரையோடு வெளியிட்டார். மிகுந்த முயற்சியோடும், புலமைக் கவனத்தோடும் அந்தப் பதிப்பு மேற்கொள்ளப்பட்டது. அதனைத் தொடர்ந்து பத்துப்பாட்டு, புறநானூறு, ஐங்குறுநூறு, சிலப்பதிகாரம், பதிற்றுப்பத்து, பரிபாடல், புறப்பொருள் வெண்பாமாலை, நன்னூல் மயிலைநாதர் உரை, நம்பி திருவிளையாடல், திருக்காளத்திப் புராணம் முதலியவற்றை ஆராய்ந்து பதிப்பித்தார்.

நீதிநெறி விளக்கவுரை, வீரசோழியம், தணிகைப்புராணம், தொல்காப்பியப் பொருளதிகாரம், கலித்தொகை, இலக்கண விளக்கம், சூளாமணி, தொல்காப்பியம் சொல்லதிகாரம், சேனாவரையம், தொல்காப்பியம் எழுத்ததிகாரம், நச்சினார்க்கினியம் முதலிய நூல்களை அவர் திருவாடுதுறை ஆதீன மகாவித்துவானாக விருந்த மீனாட்சிசுந்தரம்பிள்ளையின் மாணவராகிய உ.வே.சாமிநாதையர் மரபு வழியான நூலியத் திறனாய்வுக்குரிய தளத்தை வலுப்படுத்தினார்.

ஏட்டுவடிவில் இருந்த பழந்தமிழ் நூல்களை அச்சு வாகனம் ஏற்றி பாதுகாத்துத் தந்த பெருமைக்குரியவர்களாக இவர்கள் இருந்துள்ளார்கள். அவர்களாற்றிய அரும்பணி எமது மொழியை வாழ வைத்தது. இவர்களின் செயற்பாட்டுக்குப் பின்னரான காலப் பகுதியிலேயே நாட்டார் இலக்கியங்கள் சமூகததின் அடித்தளத்து மக்களின் வாழ்க்கையோடு இணைந்திருந்த நிலையில் அவற்றின் மீதான கவனம் செலுத்தப்பெற்றது.

தமிழ் இலக்கியங்களைப் பிறமொழி இலக்கியங்களுடன் ஒப்புநோக்கும் முறையானது விரிந்த உலக நோக்கினுக்கு இட்டுச் செல்வதாக அமைந்தது. ஒப்புநோக்குகையை வெறுமனே 'புலமைப் பயிற்சி' என்ற நிலைக்கும் அப்பால் நகர்த்திச் சென்றவர்கள் வரிசையிலே பேராசிரியர் க. கைலாசபதி குறிப்பிடத்தக்கவர். இணைநிலை நோக்கு பாத்திரங்கள், பண்பாட்டுக் கோலங்கள், செல்வாக்குகள் என்பவற்றுக்கும் அப்பால் கருத்தியல் நிலையிலான ஒப்பியல் ஆய்வை பேராசிரியர் க.கைலாசபதி அவர்கள் தமிழில் வளம்படுத்தினார்.

புலமை நிலைத் திறனாய்வின் வளர்ச்சியில் இலங்கைப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த அறிஞர்களான விபுலானந்த அடிகள், பேராசிரியர் க.கணபதிப்பிள்ளை, பேராசிரியர் வி.செல்வநாயகம், பேராசிரியர் சு.வித்தியானந்தன், பேராசிரியர் க.கைலாசபதி, பேராசிரியர் கா.சிவத்தம்பி ஆகியோர் தனித்துவமானவர்கள். இவர்கள் தமிழ் இலக்கிய ஆய்வு முயற்சிகளை முனனெடுத்து அணி சேர்த்துள்ளார்கள்.★

---

## 'இணுவில் ஒலி' ஒலிக்கிறது

எங்கள் திருவூராம் இணுவையில்
பொங்கும் தமிழருவி பாய்கிறது
பெரிய சித்தரின் பெருஞ்சேவையினால்
அரிய பெருமஞ்சம் வீதியில் அசைகிறது
புவிபோற்றும் வீரமணியின் காலமதில்
தவில் மேதைகளும் தோன்றி நின்றனரே
ஆறுமுகநாவலர் காட்டிய பாதையிலே
ஆறு திருமுருகனின் பணி சிறந்து செல்கிறது
சேர்புகழ் ஓங்கும் அறிவாலயத்தில்
பார் புகழ் 'இணுவில் ஒலி' ஒலிக்கிறது.

செல்வி ச.சுரமி
இணுவில் சிவகாமி அறநெறிப்
பாடசாலை மாணவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொழிவிருத்தியில் வாசிப்பின் முக்கியத்துவம்

திருமதி ஜெ.வரதராஜன்
*B.A. (Dip in Edu)*
ஆசிரியர், யா/இராமநாதன்
கல்லூரி , மருதனார்மடம்

மொழி என்பது ஒரு கருத்துத் தொடர்பு சாதனம் ஆகும். ஏனைய உயிரினங்களில் இருந்து மனிதனைப் பிரிக்க மொழியே மூலசாதனமாக அமைகிறது. ஆரம்ப கால கட்டத்தில் ஆதிமனிதன் மொழியை சைகை ஊடாகக் கற்றான். நாகரீக வளர்ச்சி பேச்சுத் திறனைக் கொண்டு வந்தது. கல்வி என்பது தோண்டுதல் எனப் பொருள் படும். அறியாமையில் இருந்து தோண்டி அறிவு நிலைக்கு வருவதற்கு மொழி அவசியம் ஆகும்.

தமிழ் மொழி அழகுமொழி. திராவிடக் குடும்பத்தின் மூத்தமொழி, அமுதாகக் கவிஞர்களால் போற்றப்பட்ட இனிய மொழி. இம்மொழியை விருத்தி பெறச் செய்வதற்கு

1) கேட்டல் திறன் (Listening Skill)
2) பேச்சுத் திறன் (Speaking Skill)
3) எழுதும் திறன்
4) வாசிப்புத் திறன்

ஆகியவை மிகவும் அவசியமாகும். இத்திறன்களுக்கு வாசிப்பு பெரிதும் துணை புரிகிறது. வாசிப்பதால் மனிதன் பூரண மடைகிறான். நல்ல நூல்கள் நல்ல நண்பர்களாகவும் துணைபுரிகின்றன. ஒவ்வொருவரும் தமக்குக் கிடைக்கும் பொழுது போக்கு நேரங்களை வாசிப்பதில் கழித்தால் அப்பொழுது பெறுமதியான பொழுதாக அமையும்.

பாடசாலைக் கல்வியை தொடர்கின்ற ஒவ்வொரு மாணவனும் வாசிப்பதில் ஆர்வம் காட்டுதல் வேண்டும். ஆர்வத்தை ஏற்படுத்துவதில் பாடசாலையும் பெற்றோரும் முழுமையான பங்கு வகிக்கிறார்கள். 'கண்டது கற்கப் பண்டிதன் ஆவான்' என்ற வாக்குக் கிணங்க நூல்களை வாசிக்க வேண்டும் என்ற ஆர்வத்தைத் தூண்டும் வகையில் கவர்ச்சிகாரமான புத்தகங்களையும் எழுத்தாளர்களையும் மாணவர்களுக்குக் காட்டுதல் வேண்டும். வாசிப்பில் விருப்பம் ஏற்படுமானால் வளமான வாசிப்பு என்பதன் முழுமையான அர்த்தத்தை உணருவர். இளமைப் பருவம் இனிமை நிறைந்தது. இப்பருவத்தில் கற்கும் விடயங்கள் பசுமரத்தாணி போல மனதிலே பதியும். பிற்காலத்தில் ஆளுமை மிக்க சிறந்த சமூகப் பொருத்தப்பாடுடைய நற்பிரஜைகள் உருவாவதற்கு அடித்தளமாக விளங்குவது வாசிப்பேயாகும். இவ்வாசிப்பை மெருகூட்ட சிறந்த இடம் நூலகமாகும். இதனாலேயே மாணவர் பலனடையவேண்டும் என்ற நோக்குடன் பாடசாலைகளிலும் கிராமங்களிலும் நூலகங்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு வகுப்பறையிலும் வாசிப்பு மூலை ஒன்றை அமைப்பதும் சிறந்ததாகும். பிறந்தநாள் பரிசாக ஒரு சிறந்த நூலை பரிசாக வழங்குதல் போன்றன வாசிப்பினைத் தூண்டும் வழிகளாகும்.

நல்ல கருத்துக்களை அப்படியே நிறுத்தி வைக்கும் தன்மை நல்ல புத்தகத்திற்கே உண்டு. சிறந்த நூல்களை வாசிப்பது மனதுக்கு புத்துணர்வையும் தூயசிந்தனையையும் ஏற்படுத்தும் என்பது அறிவியலாளர் கருத்து. ஆதலால் ஒவ்வொரு பிள்ளைக்கும் சிறுவயதில் இருந்தே வாசிக்கும் பழக்கத்தை உருவாக்கவேண்டும்.

தற்கால உலகில் நவீன ஊடகங்களின் வளர்ச்சியின் பெறுபேறு வளர்ந்து வரும் சிறார்களை தொலைக்காட்சி பார்ப்பதிலும் கம்பியூட்டரில் விளையாடுவதுமான தன்மைக்கே இட்டுச் செல்கிறது. இந்த நிலை மாறி நாளைய சமூகம் சிறந்த எழுத்தாளனையோ கவிஞனையோ உருவாக்க எமது தமிழ் மொழியாற்றல் பெருக வாசிப்புப் பழக்கம் மேலோங்க வேண்டும். ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# பயணம்



தொலைபேசியில் வந்த செய்தியைக் கேட்ட அருட்சகோதரி நிர்மலா விற்கு என்ன செய்வ தென்றே தெரியவில்லை. கவலைப்பட்டு ஒன்றும் பிரயோசனம் இல்லை என்பதை விளங்கிக் கொண்டு தனது தலைமை அருட்சகோதரியிடம் சென்று விஷயத்தை சொல்கின்றார்.

"ஓம் சிஸ்டர் நிர்மலா. இப்ப நீர் யாழ்ப் பாணம் போறதுதான் நல்லது. ஒருவரும் பக்கத்தில் இல்லாத நேரம் நீராவது போய் பார்த்துவிட்டு வாரும். இறைஆசி உம் மோடு இருக்கட்டும்.... நான் திருகோண மலைக்குப் போன் பண்ணி சொல்றன். அங்கத்தே சிஸ்டர்ஸ் கப்பலுக்கு புக் பண்ணும் ஒழுங்கைச் செய்யட்டும்" எனக் கூறி முடிக்கவும், சிஸ்டர் நிர்மலாவின் கண்ணில் இருந்து கண்ணீர்த் துளிகள் வீழ்ந்து சிதறின.

பெற்ற பிள்ளைகளை விட இங்குள்ள வர்கள் எவ்வளவு உணர்வுபூர்வமானர்கள் என நினைக்கும் போது சகோதரர்கள் மேல் இனம் புரியாத வெறுப்பு தோன்றி மறைந்த தென்னவோ உண்மை.

அடுத்த நாள் தலைமை சிஸ்டர் கொடுத்த பணத்தைப் பெற்றுக் கொண்டு மட்டக்களப்பு டவுனில் இருந்து பய ணத்தை ஆரம்பித்த நிர்மலாவிற்கு கடந்த கால நிகழ்வுகள் மனக் கண்முன் நிழ லாடின.....

அன்பான அப்பா, அம்மா சகோதரர் கள் மாத்திரம் குறைவின்றி பத்துப் பேர். அமைதியாக இருந்த வாழ்க்கையில்தான் சூறாவளி வீசத் தொடங்கியது. அது இவர்களின் குடும்பத்திற்கு மட்டும் வீசிய சூறாவளி இல்லை.

இலங்கையில் குறிப்பாக யாழ்ப்பாண எல்லாக் குடும்பங்களிற்கும் வீசிய சூறாவளி அது. கொழும்பில் நடந்த 83 ஆம் ஆண்டுக் கலவரத்தைத் தொடர்ந்து தமிழ்ப் பிரதேசங்களில் நடமாடிக் கொண் டிருந்த படையினர், பெடியன்களை கண்டபடி பிடிக்கத் தொடங்கியிருந்ததால் மூத்த அண்ணனை ஏதோ கஷ்டப்பட்டு பிரான்சுக்கு அனுப்பிவிட்டனர் அம்மாவும், அப்பாவும். அதைத் தொடர்ந்து வருடத் திற்கு ஒவ்வொருவராய் இவ்விருவராய் போய்ச் சேர்ந்தனர் என்னையும், அம்மா வையும் அப்பாவையும் தவிர...

> யாரையும் புண்படுத்த வேண்டும் என்ற எண்ணத்திலோ அல்லது எனது ஆரம்ப காலக் கதைகளுக்கே பரிசில்கள் கிடைத்த இறுமாப்பிலோ நான் இக்கதையை எழுதவில்லை. உள்ளதை உள்ளபடி யதார்த்தமாக வாசகனுக்கு வழங்குவதையே என் திடமான பலமாகக் கொண்டு எழுதி னேன். உயிரோட்டமாகக்கதை அமைய வேண்டும் என்பதால் சமுதாயத்தின் கண் நான் தரிசித்த தரிசனங்களை, அனுபவங்களை என் கதாபாத்திரங் கள் வாயிலாக வெளிக்கொணர்ந் துள்ளேன்.

எனது வாழ்க்கைப் பாதை வேறாக இருந்ததால் அவர்களுடன் போய்ச்சேர வேண்டியிருக்கவில்லை. இடையிடையில் வரும் திருமணப் புகைப்படங்கள் பிள்ளை களின் வாழ்க்கை நிலையினை அம்மா, அப்பாவிற்குத் தெரியப்படுத்திக் கொண்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ருந்தன. எனக்கும்தான். பிறகு ஓயாத அலைகள் போல போரும் தொடர அம்மா, அப்பாவிற்குப் பிள்ளைகளிட மிருந்து வழமையான நச்சரிப்புத் தொடங்கியது. டிக்கட் அனுப்புகிறோம் இரண்டு பேரும் வாங்கோ எனக் கூறவும், வழமையான பெற்றோரின் விடையாக 'வேண்டாம் நாங்கள் இங்கேயே இருக்கிறம்' என்று இவர்கள் கூறிவிட்டனர்.

எம்முடைய திருமணமாகிய பெண் குலத்திற்கே உரிய குணம் ஒன்று உண்டு. பிள்ளைகள் வரும் வரை தான் கணவன். பேரப்பிள்ளைகள் வரும் வரைதான் பிள்ளைகள். அம்மாவும் அதற்கு விதிவிலக்கில்லாமல் போகவும் பிள்ளைப் பேறு பார்க்கவாவது வரும்படி அம்மாவை அழைத்த போது அவளால் மறுப்புச் சொல்ல முடியவில்லை. அப்போதுதான் இந்தியப் படையினரின் அட்டூழியங்கள் சிறிது ஓய்ந்திருந்த 89 ஆம் ஆண்டுக் கடைசிப் பகுதி.

"இஞ்சரும்... நீர் போய் பிள்ளைகளைப் பாரும். இஞ்ச என்ரை சகோதரங்கள் இருக்கினம்தானே. அப்படி என்னப் பார்க்காமல் விட்டு விடுவினமே... நீர் என்னைப் பார்க்காம போயிட்டு வரும்." அப்பா கூறவும் அம்மாவும் பிரான்ஸுக்கு வெளிக்கிட்டுவிட்டார்.

அதன் பிறகு வருடத்திற்கு கிடைக்கும் இரண்டு கிழமை லீவில் நிர்மலா சிஸ்டர் போய்ப் பார்த்து வருவதைத் தவிர அப்பாவிற்கு வேறு யாருமே இல்லாமல் போய் விட்டனர். மாதந் தவறாமல் வரும் 'பிராங்'க்கை விட.

இப்போதெல்லாம் அப்பா முந்திய மாதிரி இல்லை. முதுமை மெல்ல .... மெல்ல.... விழுங்கிக் கொண்டு இருந்தது. அம்மா பக்கத்தில் இருந்தால் பரவாயில்லை எனத் உணரத் தொடங்கியிருந்தார். அப்பா அம்மாவிற்கு இங்கு வந்தால் மீண்டும் போக முடியாத நிலை எனக்கூறி, பிள்ளைகளும் அவவை அனுப்ப எந்தவித முயற்சியும் எடுத்த மாதிரித் தெரியவில்லை. கடைசியாக நிர்மலா சிஸ்டர் போன வருடம் போயிருந்த போது இடப்பெயர்வினால் ஊரே அல்லோகல்லோலப்பட்டு இருந்தது. இவர்கள் வீட்டிலும் யாரோ ஒரு குடும்பத்தை அப்பா தங்க விட்டிருந்தார். இவ்வளவு நாளும் அப்பாவை பார்த்தவர்களும் இப்போது இல்லாததால் அப்பா மிகவும் ஆடிபோயிருந்தார். என்ன செய்வது பத்துப்பிள்ளைகளும், மனைவியும் தான் பிரிந்து இருக்கிறார்களே.

வீட்டில் இருந்த குடும்பத்தவரிடம் மாசா மாசம் பணம் அனுப்புவதாயும், மூன்று நேரச் சாப்பாட்டை மட்டும் கொடுக்கச் சொல்லி ஏற்பாடு செய்துவிட்டு வந்திருந்தார் நிர்மலா சிஸ்டர்.

பெற்ற அப்பாவையே யாரிடமோ பார்க்கச் சொல்லிவிட்டு வருவது மனத்திற்கு பாரமாக இருந்தாலும் அந்த நிலையில் சிஸ்டரால் இதனை விட வேறெதும் செய்யமுடியவில்லை. அப்போது அப்பா கையைப் பிடித்து விக்கி, விக்கி அழுதது இப்போதும் நினைவில் நின்றது. "பிள்ளை.... நீ சிஸ்டராய்ப் போனாக் கூட வந்து பார்க்கிறாய். மற்றதுகள்...." என்று சொல்லவும் முடியாமல் நின்ற நிலை மனதை அரித்ததென்னவோ உண்மை.

இப்போதும் யாழ்ப்பாணத்தில் எங்கள் வீட்டில் இருந்த பெடியன்தான் மட்டக்களப்புக்கு 'கோல்' எடுத்திருந்தான்.

அப்பாவுக்கு "ஸ்ரோக்' ஆக்கி ஜெனரல் கொஸ்பிற்றலில் அட்மிட் பண்ணி இருப்பதாகவும், உடனே வரும்படியாகவும் கூறியிருந்தான். அதனால்தான் இந்த அவசரப் பிரயாணம்.

அப்பாவிற்கு ஏக்கமும் தனிமையுமே வருத்தத்தைக் கொடுத்திருக்கும். பிராங் கால் அன்பைக் கொடுத்து விடமுடியாது என்பது பிள்ளைகளுக்குத் தெரிந்திருக்கவில்லை.

இவ்வாறாக சிந்தனை கடந்த காலத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தில் தொடங்கி இன்று வரை நீண்டு கொண்டிருந்தது..... வழியில் செக் பொயின்ற்றிலும், உடுப்பிற்காகவோ என்னவோ சிஸ்டர் நிர்மலா இறக்கப்படாததால் சிந்தனைக் கலைப்பு ஏதும் இல்லாமல் தொடங்கி முடிந்திருந்தது.

திருகோணமலைக்குப் பின்னேரம் ஐந்து மணி போல வந்திறங்கவும் அடுத்த பேரிடி சிஸ்டர் நிர்மலாவிற்கு வந்திறங்கியது. அப்பா போய்ச் சேர்ந்துவிட்டாராம். இனி என்ன செய்வது? எல்லாம் என்றோ முடிய வேண்டியவை தானே என ஏனைய சிஸ்டர்ஸ் ஆறுதல்படுத்தினாலும் அப்பா கடைசியாக இறந்த சூழ்நிலை தான் சிஸ்டர் நிர்மலாவை நொறுக்கிவிட்டிருந்தது. பிரான்சிற்கும் செய்தி போய் இருந்தது.

ரெலிபோனிற்குள்ளால் எல்லோரும் அழுதார்கள். அம்மாவும் சேர்ந்துதான். மறக்காமல் காசை அனுப்பி வைத்திருக்கிறோம் என்றும் சொன்னார்கள். மூத்த அண்ணன் மட்டும் வரட்டா? என்று கேட்டாரே தவிர, வருகிறேன் என்று சொல்லவில்லை.

ஓடித் திரிந்து கப்பலுக்கு புக் பண்ணி இருந்தார்கள் மற்றைய சிஸ்டர்ஸ். சிஸ்டர் நிர்மலாவிற்குத் துணையாக வேறு இரண்டு சிஸ்டர்சும் போகின்றார்கள்.

யாரே தூரத்து சொந்தக்காரர்கள் வீட்டில் பிரேதம் வைத்திருக்கிறார்களாம். நாளை தான் கப்பல்.

இரவு முழுக்க சிஸ்டர் நிர்மலாவால் அழத்தான் முடிந்தது. அப்பாவிற்குக் கடைசியாக ஒருவாய் தண்ணி கூடக் கொடுக்க யாருமில்லாத அனாதைப் பிணமாய் போயிருக்கின்றாரே என்ற நினைப்புத்தான் சிஸ்டர் நிர்மலாவின் நெஞ்சைச் சுட்டது.

ஆயிரம் ரூபா சிப்பிற்குதான் தான் புக் பண்ணியிருக்கிறார்கள். 2.30 மணியிருந்து திருகோணமலை ஜெட்டிக்கு வெளியே காத்து நின்று 5.30 மணி போலத்தான் உள்ளே விட்டார்கள். வழியனுப்ப வந்தவர்களிடம் எல்லாம் சொல்லிவிட்டு 'செக்கிங்' எல்லாம் தாண்டி உள்ளே டோக்கனை கொடுத்துவிட்டு கப்பலில் ஏறி அமர்ந்த நிர்மலா சிஸ்டர் தன்னையும் மீறி வந்த அழுகையை கஷ்டப்பட்டு அடக்கிக் கொண்டார்.

நெஞ்சிலும் தோளிலும் சுமந்து எம்மை வளர்த்த ஜீவன் இன்று யாருமில்லாமல் அனாதையாய் நிரந்தரமாய் தூங்கிவிட்டதை ஏன் பெற்ற பிள்ளைகள் வேதனையாய் உணர்கிறார்கள் இல்லை என்ற கேள்விக்கு சிஸ்டர் நிர்மலாவிற்கு விடை தெரியவில்லை.

இவருக்கு மட்டும் இல்லை.... ஆயிரம் ஆயிரம் ஜீவன்களுக்கு விடை தெரியாத ஒரே கேள்வி இன்று இதுதான்.

'எண்டியுரன்ஸ்' யாழை நோக்கிச் சென்று கொண்டிருந்தது. 'இறுதியாக அனாதை அப்பாவின் முகத்தை ஒரு தடவையாவது பார்த்து விடுவோம்' என நினைத்த சிஸ்டர் நிர்மாவின் கண்களில் இரு கோடுகளாகக் கண்ணீர் வழிந்தது. ★

கல்லூரியில் கல்வி கற்கும் காலத்தில், அதாவது இற்றைக்கு 17 வருடங்களுக்கு முன்பு 16 வயது நிரம்பிய கதாசிரியரால் எழுதப்பட்ட இச்சிறுகதை, திருகோணமலை பட்டணமும் சூழலும் பிரதேச சாகித்திய விழாவில் முதற் பரிசினைப் பெற்றுள்ளது. இக்கதைச் சம்பவங்கள் யதார்த்தமானவை. எமது சமுதாயத்தைப் பொறுத்தளவில் இன்றும் இதே நிலை தொடர்கதையாகவே தொடர்கிறது.

–ஆசிரியர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிந்தவையும் தெரிந்தவையும்

★ யாழ்ப்பாணத்தை ஆரியச் சக்கர வர்த்திகள் அரசாண்ட காலத்திலே முதன் முதலாக 'சரஸ்வதி மகால்' என்னும் நூலகம் அமையப் பெற்றது. நல்லூரிலே சங்கம் அமைத்து தமிழ் வளர்த்த ஆரியச் சக்கரவர்த்திகள் சிறந்த நூலாசிரியர்களா கவும் விளங்கியிருக்கின்றனர். நல்லூர், நாயன்மார்கட்டு, இணுவில் போன்ற பன்னி ரண்டு ஊர்களும் புலவர்கள், அறிஞர்கள், கலைஞர்கள் நிறைந்த பேரூர்களாகத் திகழ்ந்திருக்கின்றன.

இந்த ஆரியச் சக்கரவர்த்திகளுள் சிறந்துவிளங்கிய செகராஜசேகரன் என்ற மன்னன் தமிழகத்திலிருந்து ஏட்டுச்சுவடி கள், ஆவணங்கள் ஆகியவற்றையெல் லாம் சேகரித்துக்கொண்டுவந்து 'சரஸ்வதி மகால்' என்றும் நூலகத்தை அமைத்தான் என்று வரலாறு கூறுகின்றது. இதுவே முத லாவது நூலகமாக இருக்கவேண்டும்.

★ பராஜசேகரன் என்னும் மன்னவன் நீதிநெறி நின்று செங்கோலோச்சிய சான்றோன். இம்மன்னன் கோயில் கட்டி வழிபாடு செய்ததுடன் 'பரராஜசேகரம்' என்ற சிறந்த வைத்திய நூலையும் ஆக்கித் தந்துள்ளான். அரச பரம்பரை முதற் கொண்ட அறிவுவிருத்திக்கான ஆக்கப் பணிகள் இந்த மண்ணில் இன்றும் தொடர்ந்த படிதான் இருக்கின்றன.

★ இணுவில் ஊரும் இந்த மன்னர்க ளின் ஆட்சிக்குள் இருந்த தொடர்பு காரண மாக அவர்களின் பெயர்களில் இரண்டு ஆலயங்கள் தலைநிமிர்ந்து நின்கின்றன. ஒன்று ஸ்ரீ பரராஜசேகரப்பிள்ளையார் கோயில் மற்றது செகராஜசேகரப்பிள்ளை யார் கோயில். மேலும் இம்மன்னர்களின் நினைவாக இணுவில் அறிவாலயத்தில் அவர்களின் பெரிய சிலைகள் வைக்கப்பட் டுள்ளன.

★ யாழ்ப்பாணத்து சமூகக் கட்டமைப் புக்களிலே அவற்றின் ஆரம்ப அபிவிருத்தி யின் அச்சாணிகளில் ஒன்றாக சனசமூக நிலை யங்கள் விளங்கிவருகின்றன. இதன் ஒரு படி நிலையாகக் கிராமங்கள் தோறும் குறைந்தது ஒரு வாசிகசாலையாவது அமைந்திருப்பதைக் காணலாம். இவ்வாசிக சாலைகள் கிராம மக்களின் ஆரம்ப அறிவுத் தேவைகளையும் ஆளுமைகளை யும் விருத்தி செய்து வந்துள்ளன.

★ ஆங்கிலோயர் ஆட்சிக் காலத்தில் பல நூல்கள் உருவாக்கப்பட்டன. ஆனா லும் அவை சாதாரண மக்களுக்கு எட்டாக் கனியாகத்தான் இருந்திருக்கின்றன. கிராம மக்களின் கல்வி எழுச்சியையோ வாசகர்களின் தேவைகளையோ அவை பூர்த்தி செய்யவில்லை. யாழ்ப்பாணப் பொதுநூலகம் ஆசியாவிலேயே சிறந்த நூலகமாகப் பல அரிய நூல்களைத் தன் னத்தே கொண்டு பலரின் அறிவுப் பசி யைத் தீர்த்துவந்தது. யாழ்.பொது நூலகம் எரிக்கப்பட்டதன் விளைவாக கிடைத்தற் கரிய பல நூல்களை இழந்துவிட்டோம். அது ஒரு பெரிய பேரிழப்பாகும்.

★ யாழ்ப்பாண நூலகத்தின் இடை வெளியை நிரப்பும் வகையில் கொழும்புத் தமிழ்ச்சங்க நூலகம் இன்று இருபத்தி நான்காயிரம் அரியநூல்களையும் மொத்த மாக நாற்பத்தையாயிரம் நூல்களையும் தன்னகத்தே கொண்டு இயங்கி வருகின் றது. இந்த அரிய நூலகத்தை உருவாக்கு வதில் ஆரம்ப காலத்தில் அர்ப்பணிப்புடன் செயற்பட்ட பெருமகனார் இணுவில் மண் ணின் மைந்தன் தமிழவேள் இ.க.கந்த சுவாமி ஆவார். எங்கு சென்று வாழ்ந்தா லும் எம்மவர்கள் இணுவில் மண்ணின் பெருமையைக் கட்டிக்காத்து வருவது எமக்கெல்லாம் பெருமையன்றோ!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ Lady Windermere's Fan என்னும் மேடை நாகத்தை ஒஸ்கார் உவைல்ட் (Oscar Wilde) எனும் ஆங்கில நாடகாசிரியர் எழுதியிருந்தார். அந்த நாடகத்தை 'மேகலையின் விசிறி' என்று தமிழாக்கம் செய்தவர் இணுவில் இ.இரத்தினம் அவர்கள். இந்நாடகம் 1964 ஆம் ஆண் டில் 'அரங்கு, நாடக மன்றத்தால் கொழும்பில் மேடையேற்றப்பட்டதாக அறிகிறோம்.

★ துன்பியல் நாடகத்தின் மரபு கிரேக்க இலக்கியத்தில் உருவாகியது. மன்னர் ஈடிபசு (Oedipus Rex) என்ற கிரேக்கக் கதை தழுவிய நாடகத்தை சொபக்கிளிசு (Sophocles) ஆங்கிலத்தில் எழுதியிருந்தார். அதைச் செய்யுள் நடையில் தமிழாக்கம் செய்தவர் இ.இரத்தினம் அவர்கள். இந்த நாடக நூல் 1969 ஆம் ஆண்டில் இலங்கையில வெளியிடப்பட்டது.

★ மகாகவி ஷேக்ஸ்பியர் எழுதிய துன்பியல் நாடகங்களுள் 'ஓதெல்லோ' பிரசித்தி பெற்றது. மேண்மையான உள்ளம், பொறாமை வசப்பட்டு, எவ்வாறு தாழ்வுறுகின்றது என்பதை இந்நாடகம் சித்திரிக்கின்றது. இதை வானொலி நாடகமாகத் தமிழாக்கம் செய்தவர் இ.இரத்தினம் ஆவார். இந்நாடகம் 1980 ஆம் ஆண்டிலே ஷேக்ஸ்பியர் தினத்தையொட்டி இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தானபனத்தின் தமிழ்ச்சேவையில் ஒலிபரப்பாகியது. ●

வாசகப் பெருமக்களே! மாணவச் செல்வங்களே!

நீங்கள் அறிந்த, தெரிந்த சிறு, சிறு விடயங்களைச் சுருக்கமாக எமக்கு அனுப்பிவைத்தால் அவற்றை இந்தப் பகுதியில் வெளியிடுவோம். உண்மைகள் என்றும் மறைக்கப்படக்கூடாது. எனவே தவறாது எழுதுங்கள்.

- ஆசிரியர்.

## அறவியலும், ஒழுக்கங்களும்

மெய்யியல், சமூகவியல், கல்வியியல், சமயம் ஆகிய துறைகளில் அறம் மற்றும் ஒழுக்கம் பற்றிய ஆய்வுகள் மற்றும் சமூகம் கட்டுமை செய்த விழுமியங்கள் தொடர்பான விளக்கங்களும் இடம்பெற்று வருகின்றன. "அறநோக்கும் ஒழுக்க நடத்தைகளும் மகிழ்ச்சியான வாழ்க்கைக்கு இட்டுச் செல்லும் அவை ஏனைய திறன்களைப் போன்று பயிற்சி வழியாகத் திரட்டிக் கொள்ளப்படல் வேண்டும்." என்று அரிஸ்ரோட்டில் விதந்துரைத்தார்.

சமூக வாழ்க்கைக்கும் அறம் பற்றிய சிந்தனைகளுக்கும் சமூகக் கட்டமைப்பைச் சிதறாது பாதுகாக்கும் ஆசிரியத்துவத்துக்குமிடையே நேரிய இணைப்புக்கள் காணப்படுகின்றன. சிந்தித்தல், நேரிய சிந்தனை வழியாக முடிவுகளை மேற்கொள்ளல், உள உறுதியுடன் இடையூறுகளையும் மறச் செயல்களையும் வென்றெடுத்தல் முதலியவை ஆசிரியர்களுக்குரிய அறச் செயலாகுமென இலட்சிய நோக்கில் அறம் வலியுறுத்தப்படுகின்றது.

தொன்மையான சமூக அமைப்பிலே பகுத்து உண்டு பகரும் வாழ்வும் சிந்தனையும் செயற்பாடுகளும் அறவழி நிற்றலாயிற்று. தமிழ் மரபிலே ஒழுக்கம் ஐவகை நிலப்பாகுபாட்டுடன் தொடர்புபடுத்தப்பட்டு அறவொழுக்கம், புறவொழுக்கம் என்ற நிலைகளிலே விளக்கப்பட்டன. தொன்மையான தமிழ் மரபிலே சமயம் சாரா முறையில் ஒழுக்க நடத்தைகள் விளக்கப் பெற்றுள்ள தனித்துவத்தைக் காணமுடியும்.

மேலைப்புல வரலாற்றிலே மக்களின் சமூக வாழ்க்கை நியமங்களை அடியொற்றியே அறக் கருத்துக்களும் ஒழுக்க நெறிகளும் வலியுறுத்தப்பட்டன. உடல், உள்ளம் என்ற இரு நிலை வேறுபாடுகள் அறம் உரைத்தலிலும் வழிகாட்டல்களை ஏற்படுத்தின. வெளித் துலங்கும் நடத்தைகளுடன் தொடர்புபட்டிருந்த அறம் என்பது மனத்தின் செயற்பாடுகளை நோக்கியும் விரிவாக்கம் பெற்றது. 'தூய மனம்', 'நல்லவற்றை எண்ணும் மனம்', தீயன செய்ய மனத்தாலும் எண்ணாதிருத்தல்' என்றவாறு உள்ளத்தை அடிப்படையாகக் கொண்ட அறன் வலியுறுத்தல் வளர்ச்சியடைந்தது.

அறவியற் சிந்தனைகளின் வளர்ச்சி அதனோடிணைந்த 'இன்பவாதம்' என்பதற்கு இட்டுச் சென்றது. புத்திபூர்வமான வாழ்க்கை நல்லொழுக்க வாழ்க்கையாகவும், இன்பம் தரும் வாழ்க்கையாகவும் எடுத்துரைக்கப்பட்டது. சுய கட்டுப்பாடும் ஆசைகளிலிருந்து விடுபடலும் புத்திபூர்வமான வாழ்க்கையாயிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தமிழ்மொழியின் பெருமையை உலகறியச் செய்த தனிநாயகம் அடிகளார்

தனிநாயகம் அடிகளாரின் நூற்றாண்டு (2013) நினைவாக இக்கட்டுரை பிரசுரமாகின்றது.

- த.சிவநித்திலன்.

ஈழமாதா பெற்றெடுத்த தவப்புதல்வன், ***"தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும்"*** என்ற பாரதியாரின் எண்ணங்களுக்குச் செயலுருவம் கொடுத்த தனையன், உலகத் தமிழாராய்ச்சி மாநாடு பல கண்ட பேரறிஞன், எண்ணற்ற கருவூலங்களைத் தரணிக்குத் தந்த நல்லாசான், தமிழ் இலக்கியச் செல்நெறிகளை ***"திறமான புலமையெனில் வெளிநாட்டோர் அதை வணக்கச்செய்தல் வேண்டும்"*** என்பதற்கு அமைவாகச் செயற்பட்ட செயல் வீரன், பிறந்த மண் பெருமை கொள்ள உலகமே போற்ற வாழ்ந்த பெருந்தகை. மறைந்தும் மறையாத மாசற்ற மாணிக்கம். ஆம் அத்தகைய சிறப்புகளுக்கும் உரிய பெருமகனாராக தனிநாயகம் அடிகளாரைக் காண்கின்றோம்.

கிராமியக் கலைகளின் செழுமையும், மரபுக் கல்வியுடன் நவீன கல்வியும் செழித்து வளர்ந்த யாழ்ப்பாணத் தீவகத்தின் கரம்பொன் கிராமத்தில் 1913ஆம் ஆண்டு பிறந்த இவர் தமது ஆரம்பக் கல்வியை தமது கிராமப் பள்ளிக்கூடத்தில் கற்றார். யாழ்ப்பாணத்தில் மேலெழுந்து நின்ற ஆங்கிலக் கல்வியின்பால் இவருக்கு நாட்டம் ஏற்பட்டது. ஆங்கில மொழியுடன், தமிழ், இலத்தீன், சமஸ்கிருதம் ஆகிய மொழிகளையும் இடைநிலைக் கல்வியில் பயின்றார். கல்வி வாழ்க்கைப் பின்புலம் அவரின் பன்முக எழுச்சிக்குத் தளம் அமைத்துக் கொடுத்தது. பிற்காலத்தில் அவர் பத்துக்கு மேற்பட்ட மொழிகளிலே ஆளுமை பெறுவதற்குரிய ஆற்றலை உருவாக்கிக் கொடுத்தது.

இறைபணியினை மேற்கொள்வதே சிறப்பான பணி என்பதை உணர்ந்த இவர் கொழும்பில் இறையியல் கல்வியை ஆழ்ந்து கற்கத் தொடங்கினார். பின் திருவனந்தபுரம் மறை மாவட்டத்தில் இணைந்து, ரோம் நகருக்குச் சென்று கற்று இறையியல் கலாநிதிப் பட்டத்தைப் பெற்றுக்கொண்டார். இலங்கையின் கல்வி நிலையிலும் அரசியல் நிலையிலும் இன உணர்வு எழுச்சிகொண்ட காலப்பின்புலம் தமிழிற்புலமை ஈடுபாட்டை அடிகளாருக்கு ஏற்படுத்தியது. அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் இணைந்து கற்று தமிழில் எம்.லிட் பட்டத்தைப் பெற்றுக் கொண்டார். அப்பட்டத்தைப் பெறுவதற்காக 'பழந் தமிழ்க் கவிதையில் இயற்கை' என்னும் பொருளில் அவரது ஆய்வு இடம் பெற்றிருந்தது.

பதினெட்டாம் நூற்றாண்டிலிருந்து ஆங்கில இலக்கிய மரபில் வளர்ச்சியுறத் தொடங்கிய மனோரதியத்தின் பரிமாணங்கள் ஒரு புறம் உணர்ச்சிகளின் மேலதிக்கத்தையும் மறுபுறம் இயற்கையின் மேலாதிக்கத்தையும் வலியுறுத்தலாயின. அத்தகைய கருத்தியல் சம்பந்தமான நெருக்கம் அடிகளாரை தமிழிலக்கியத்தின் இயற்கைத் தடங்களைத் தேடுவதற்கு உற்சாகத்தை ஏற்படுத்தியது. மேலும் இக்காலப் பகுதியில் இந்தியாவிலும் இலங்கையிலும் எழுச்சிபெற்ற தேசிய வாதம் மற்றும் இனங்களுக்கிடையிலான எழுச்சி காரணமாக அவற்றின் பின்புலத்தில் நின்று புலமைத்துவ நிலையில் தமிழின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடையாளங்களைத் தேடுதலும் அவற்றை ஆய்வு நிலையில் வலுவூட்டுவதும் முக்கிய மெனக் கொண்டு அதற்காகத் தனிநாயகம் அடிகளார் முன்னின்று உழைத்தார்.

*1964* ஆம் ஆண்டு டெல்கியின் நடைபெற்ற கீழைப்புல மாநாட்டில் உலகெங்கு மிருந்து வருகைதந்திருந்த பேராசிரியர்களை ஒன்று கூட்டி, ஒருங்கிணைத்து அனைத்துலக தமிழாராய்ச்சிக் கழகத்தை (IATR) உருவாக்குவதில் முன்னோடியாகத் விளங்கினார். அவருடைய சீர்கொண்ட பணி தமிழியலின் தளத்தை உலகளாவிய நிலையிலேயே விரிவாக்கம் செய்ய வைத்தது. நவீன ஆய்வுத் தளங்களுக்குள் தமிழியற் செயற்பாடுகளை விரிவாக்கியவராகவும் அவர் விளங்கினார். மெய்யியல், கல்வியியல், மொழியியல், சமூகவியல், நாட்டுப்புறவியல், அழகியல், இறையியல் போன்ற பல்வேறு புலமைத்துறைகளின் தளங்களிலே தமிழியல் ஆய்வை முன்னெடுத்து, நவீன ஆய்வின் பங்காளியாகவும் அவர் முன்னின்றார்.

இலங்கைப் பல்கலைக்கழகத்திலே கல்வியியல் விரிவுரையாளராகச் சேர்ந்து கல்வித் தத்துவத்தை விரிவுரையாற்றும் வேளையிலும் அவர் தமிழர்களின் தொன்மையான கல்வி மரபுகளைத் தேடும் முயற்சியிலும் முன்னின்றார். அதைத் தொடர்ந்து அவர் லண்டன் பல்கலைக்கழகத்தின் கல்வியியல் நிறுவகத்தில் இணைந்து ‘தமிழ் இலக்கியம் வழியாகக் கல்வியியல்’ என்ற பொருளில் ஆய்வினை மேற்கொண்டு கலாநிதிப் பட்டத்தைப் பெற்றுக்கொண்டார்.

தமிழரின் தொன்மையான அடையாளங்களைத் தேடியவர் அவை சிந்துவெளி நாகரிகத்தில் இடம்பெற்றிருந்தமையை கண்டு கொண்டார். மேலும் தமிழ் மொழிக்கும் தொன்மையாக ஜப்பான் மொழிக்கும் சில குறிப்பிட்ட பண்புகளிலே ஒற்றுமை காணப்படுவதையும் தாய்லாந்து மன்னரின் முடிசூட்டு விழாவிலே மாணிக்கவாசகரின் திருவெம்பாவை பாடப் படுவதையும், மேலும் தாய்லாந்து, வியட்நாம், இந்தோனேசியா முதலாம் நாடுகளிலேயே தமிழ்ப் பண்பாட்டின் எச்சங்கள் காணப்படுவதையும் அவதானித்து அவற்றை வெளிச்சத்துக்குக் கொண்டுவந்தார். அவர் சென்ற இடங்களெல்லாம் தாம் மேற்கொண்ட ஆய்வுப் பணியின் தேடலிலேயே தம்மை ஈடுபடுத்திக் கொண்டார்.

தமிழியல் ஆய்வுகளை உலகத் தரத்திற்கு இட்டுச்செல்லும் முயற்சியில் முதலில் முதன்மை ஆவணங்களின் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார். ஒப்பியல் ஆய்வு, வரலாற்றியல் ஆய்வு, விபரண ஆய்வு, பகுப்பு நிலை ஆய்வு, மூலபாடத் திறனாய்வு முதலிய அனைத்துக்கும் முதன்மை ஆவணங்கள் அடிப்படையானவை என்பதை உணர்ந்த அடிகளார் அவற்றைத் தேடிப் பெறும் முயற்சியில் தமது முழுக் கவனத்தையும் செலுத்தினார். தாம் உலகவலம் வந்தவேளைகளில் அச்சுவடிவிலும், ஏட்டு வடிவிலும் இருந்த தமிழியல் தொடர்பான ஆவணங்களைத் தேடிக் கண்ட றிந்தார்.

தமிழில் வெளிவந்த தொன்மையான நூல்களையும் ஆவணங்களையும் நேரிலே பார்வையிட்டு தேவையான பதிவுகளை மேற்கொண்டார். இலண்டன் அருங்காட்சியகம், பாரிஸ்நகர தேசிய நூலகம், லிஸ்பன் தேசிய நூலகம் போன்ற பழமையான நூல் சேகரிப்பு அகங்களில் கிடைக்கப்பெற்ற பழந்தமிழ் நூல்களையும் தமிழியல் தொடர்பான மூலப்பதிவுகளையும் ஆராய்ந்து அவற்றைத் தமது ஆய்வுக்கு உட்படுத்தினார்.

கல்வி உலகில் வளர்ச்சி பெற்றுவந்த நவீன ஆய்வுமுறைகளைத் தமிழுக்கு அறிமுகப்படுத்தலும் அவற்றை அடியொற்றி தமிழியல் ஆய்வுகளை முன்னெடுத்தலும் அடிகளாரின் அணுகுமுறையாக இருந்துள்ளன. ஆய்வு என்பது மெய்மையைக் கண்டறியும் புலமைப்பயிற்சி என அவர் கருதினார். அடிகளாரின் முயற்சி காரணமாக முதலாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு *1966* ஆம் ஆண்டு மலேசியாவில் நடைபெற்றது. அங்கு தாம் தொகுத்த ‘Reference Guid to Tamil Studies’ (தமிழ்க்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்கைகளுக்கான ஆய்வுத்துணை வழி காட்டி) என்னும் ஆங்கில நூலை வெளி யிட்டார்.

தமிழியல் ஆய்வைப் பொறுத்தளவில் இந்த ஆங்கில நூல் தனித்துவம் வாய்ந்த உசாத்துணை நூலாகும். இலத்தீன், ஜேர் மன், பிரெஞ்சு, இத்தாலி, போர்த்துக்கீஸ், ரூசியன், மலாய், சுவீடிஸ், செக், சமஸ் கிருதம் முதலிய மொழிகளில் இடம்பெற்ற தமிழ்நூல்கள் மற்றும் தமிழியல் தகவல் களை ஒழுங்குறத் திரட்டித்தரும் ஆவண மாக அது முக்கியத்துவம் பெற்று விளங்கு கின்றது. தமிழர்கள் அல்லாத தமிழியலோடு தொடர்புடைய வேற்று நாட்டுப் புலமையாள ரும் ஈடுபாடு கொள்ளத்தக்க வகையில் அந்த நூலாக்கம் மிகவும் தெளிவாகத் திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஐரோப்பிய மொழிகளில் வெளிவரும் கனதியான ஆய்வுச் சஞ்சிகைகள் போன்று தமிழியலை அடியொற்றி தாமும் சஞ்சிகை களை வெளியிட எண்ணினார். உலகளா விய வகையில் தமிழின் அங்கீகாரத்தை அடையாளப்படுத்த முடியும் என்ற நோக் கில் 'தமிழ்ப் பண்பாடு' (Tamil Culture) மற்றும் 'தமிழ்க் கற்கைகளுக்கான ஆய்வு இதழ்' (Journal of Tamil Studies) ஆகியவற் றின் ஆசிரியராக இருந்து புலமைமிக்க கட்டுரைகளைத் தாமும் எழுதி தமிழியல் ஆய்வாளர்களைக் கொண்டு எழுதுவித்தும் அவற்றைப் பிரசுரித்தார். 1968 இல் வெளி வந்த Tamil Studies Abroad (வெளிப்புலங் களில் தமிழ்க் கற்கைகள்) என்ற ஆங்கில நூல் தமிழியல் தொடர்பான உலக நிலைப் பட்ட ஆய்வுகளைப் புலப்படுத்தியதுடன், மேலும் ஆய்வுகளை முன்னெடுப்பதற்குரிய முயற்சிகளுக்கு ஊக்கம் தரும் வகையில் எழுதப்பெற்றது.

புலமை நிலையில் தமிழ்மொழிக்குரிய அங்கீகாரத்தைப் பெறுவதற்காக பல்வேறு நடவடிக்கைகளையும் அடிகளார் மேற் கொண்டு வந்துள்ளார். அந்த வகையில் அனைத்துச் சமயங்களைச் சார்ந்தோருக்கு முரிய இலக்கியங்களைக் கொண்ட தமிழின் அகநிலைப் போக்கினைத் தமது கட்டுரை கள் வாயிலாக வெளிப்படுத்தினார். கத்தோ லிக்க மதத் துறவியான இவர் இந்து சமயப் பனுவல்களில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டு அவற்றைக் கற்றமையும் அவற்றிலே பொதிந்திருந்த ஒப்புயர்வு அற்ற பக்திநெறி களின் ஆழங்களை வெளிப்படுத்தியமையும் முக்கிய அம்சமாகும். 1913 ஆம் ஆண்டில் பிறந்து 1980 இல் இயற்கை எய்தும் வரை தமிழ்மொழியின் சிறப்பை நோக்கிய செயற் பாட்டுக்காக உடல், பொருள், ஆவி அத்த னையையும் தியாக மனப்பான்மையுடன் நல்கினார்.

பேரறிஞர் சி.என்.அண்ணாத்துரை தமிழ் நாட்டின் முதலமைச்சராக இருந்த காலத் தில் அவர் தலைமையில் தமிழ் ஆராய்ச்சி மாநாடு மிகவும் கோலாகலமாக நடத் தப்பெற்றது. பத்துநாட்களாக நடைபெற்ற மாநாட்டில் உலகம் எங்கும் இருந்து பேரா ளர்கள் வருகைதந்து சிறப்பித்தனர். 1974 ஆம் ஆண்டு பல எதிர்ப்புகளுக்கு மத்தியில் யாழ்ப்பாணத்தில் உலகத் தமிழாராய்ச்சி மாநாடு நடைபெற்றது. "எல்லாப் புகழும் அடிகளாருக்கே" என்று சொல்லும் அள வுக்கு அவரது பணி என்றும் நினைவு கூரத் தக்கது. 'தமிழ்த்தூது' தனிநாயகம் அடிக ளார் என்றும் எல்லோர் இதயங்களிலும் சுடர் ஒளியாகப் பிரகாசித்துக்கொண்டே இருப்பார்.


**இணுவில் ஒலி - சந்தா விவரம்**

ஒரு வருடச் சந்தா – ரூபா 600 (அஞ்சல் செலவுடன்)
வெளிநாடு – $ 25 (U.S) ”

**உங்கள் இணுவில் ஒலியின் வளர்ச்சிக்குச் சந்தாதாரர்களாகச் சேர்ந்து ஆதரவு நல்குங்கள்.**

தொடர்பு :

த.சிவசுப்பிரமணியம்
9-2/1, நெல்சன் பிளேஸ்,
கொழும்பு - 06.
இலங்கை
தொ.இல. 071 8676482

சி.சரவணபவன்
காரைக்கால் ஒழுங்கை,
இணுவில் கிழக்கு,
சுன்னாகம், இலங்கை.
தொ.இல. 077 3126802

**வங்கிக் கணக்கு விவரம்:**
வங்கி/Bank : Commercial Bank - Wellawatte
A/C No: 8100086490




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்பெஷல் ஊசி



ரஸ்சியாவில் ஒக்டோபர் புரட்சி வெடித்த வேளை யந்திரமாய் இயங்கிய லெனின் உடம்பு மிக மோசமாக இளைத்துப் போய்விட்டது. நோய்வாய்ப்பட்ட நிலையில் வைத்தியசாலயில் அனுமதிக்கப்பட்டார்.

லெனின் படுக்கையில் விழுந்தபோது தொழிலாளர் வர்க்கமே இடிந்து விழுந்தாற் போல் பரிதவித்தது.

டாக்டர்களும் தாதிகளும் லெனினைக் குணப்படுத்த ஓடிஓடி சிகிச்சை அளிக்கலானார்கள்.

ஒருநாள் காலை வழக்கம் போல் லெனினைப் பரிசோதித்த டாக்டர் பின்வரு மாறு கூறினார்.

"அதோ அந்த மூன்றாம் கட்டிலில் ஒருவர் படுத்திருக்கிறாரே அவருக்குப் பிடித்த நோயே உங்களுக்கும் பிடித்திருக்கிறது. இது ஆபத்தான நோய். விலையுயர்ந்த 'ஸ்பெஷல்' ஊசி மருந்தைப் பெற்றுக்கொள்ள இருக்கின்றேன். கவலைப்பட வேண் டாம்" என்றார்.

லெனின் மெதுவாகக் கேட்டார்.

"மூன்றாம் கட்டலில் கிடப்பவர் யார்?"

" சுரங்கத்தில் வேலை செய்கின்ற ஒரு தொழிலாளி"

" அவருக்கும் இந்த 'ஸ்பெஷல்' ஊசிதான் போடுகின்றீர்களா?"

"இல்லை"

"ஏன்"

"இது விலையுயர்ந்த மருந்து. உங்களுக்காக மட்டுமே ஸ்பெஷலாகத் தருவிக்கப்பட்டது."

லெனினின் முகம் வாடிவிட்டது "ஒரு தொழிலாளியின் பெறுமதியைவிட அந்த ஸ்பெஷல் ஊசியின் விலை உயர்ந்ததா? என்று கேட்டார்.

டாக்டரின் நிலை சங்கடமாய்ப் போய் விட்டது. இந்த விடயத்தை ஏன் சொன் னோம் என்று அவர் வருந்தினார்.

" அந்த ஸ்பெஷல் ஊசி மருந்து கையிருப்பில் இல்லை, இருப்பதை ஒருவ ருக்குதான் செலுத்த முடியும்."

"ஓகோ, கையிருப்புவந்தபின் இருவருக்கும் சேர்த்துப் போடுங்கள்"

மனைவி குருப்ஸ்கயாவின் வேண்டுகோளையும் லெனின் நிராகரித்துவிட்டார்.

"ஸ்பெஷல் ஊசி மருந்து போடாவிட்டால் லெனின் பிழைக்கமாட்டார்" என்று டாக்டர்கள் கூறிவிட்டார்கள்.

டாக்டர்கள், தாதிகள், சேவையாளர்கள், உறவினர்கள் எல்லோரும் ஸ்பெஷல் ஊசியைப் போட்டுக் கொள்ளும்படி லெனினை மன்றாட்டமாகக் கேட்டுக் கொண்டார்கள். லெனின் அக்கோரிக்கையை ஏற்க மறுத்துவிட்டார்.

- **இந்தக் குட்டிக் கதையிலிருந்து நாம் எதைக் கற்றுக்கொண்டோம்? " மனித நேயம் மிக்கவர்கள் என்றும் மற்றவர்கள் நலனையே எதிர்பார்ப்பார்கள்"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊக்கம் கொடுப்போம், உயர்வு அடைவோம்

இருளில் இருந்து கொண்டே
இறக்கத் துடிக்கிறாய் மனிதா நீ!!!
கதவைத் திறந்து விடு
கதிரவனின் கதிர் பாயட்டும்

ஆக்கம் தேடும் மக்களுக்கு
ஊக்கம் கொடுக்க வந்திடுவோம்
ஆறுகள் பின்னால் பாய்வதே இல்லை
ஆதலால் நாமினி எழுந்திடுவோம்.

சாதனை புரியும் மனிதருக்கு நாம்
சாய்ந்திடத் தோள் கொடுத்திடுவோம்.
வேதனை முற்றிய மனிதருக்கு நாம்
வெற்றி எனும் பாதையைக் காட்டிடுவோம்.

வளர்வதும் தேய்வதும் வெண்நிலவின் இயல்பு
இன்பமும் துன்பமும் வாழ்க்கையின் நிகழ்வு
துன்பமென்று துவண்டு போகும் மனிதர்க்கு
தோணித் துடுப்பாய் என்றும் உதவிடுவோம்.


உண்மையான மனிதருக்கும்
ஊக்கமெனும் ஒரு மருந்து போதும்.
தேக்கமில்லா வாழ்வு வாழ்ந்து
திறம்படவே உழைப்பதற்கு!

**- சி.தக்ஷாயணி**
**யா/இணுவில் இந்துக் கல்லூரி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வியின் சிறப்பு



"மன்னனும் மாசறக் கற்றோனும் சீர் தூக்கின் மன்னனிற் கற்றோன் சிறப்புடையன்" எனும் ஔவைப் பிராட்டியின் கருத்துப் போல் கல்வியின் சிறப்பானது உலகெங்கும் ஓங்கி நிற்கின்றது. அதாவது "வெள்ளத்தால் அழியாது. வெந்தழலால் வேகாது. வேந்தராலும் கொள்ளத்தான் முடியாது. கொடுத்தாலும் நிறைவின்றிக் குறையாது. கள்வர்க்கோ பயமில்லைக் காவலுக்கோ மிக எளிது கல்வி எனும் உள்ளத்தே பொருளிருக்கப் புறம்பாக பொருள் தேடி உழல்கின்றார்" எனப் பெரியோர் கூறியுள்ளனர்.

கல்வியானது என்றுமே அழியாத செல்வமாகக் காணப்படுகின்றது. தற்போது எமது நாட்டில் கல்வி கற்றோர் எண்ணிக்கை அருகிக் கொண்டே வருகின்றது. வேற்று நாட்டுக் கண்டுபிடிப்புக்களைப் பாராட்டி அதன் மூலம் வாழ்வதைத் தவிர நாமும் அவ்வாறு கண்டுபிடித்து எமது நாட்டிற்குப் பெருமை சேர்த்துக் கொடுக்க வேண்டும் எனும் எண்ணம் கொண்ட நாட்டுப் பற்றாளர் எனத் தற்போது நாட்டில் எவரையும் கூறமுடியாது. கல்வியானது அளப் பெருங்கடல் அதனைக் கற்பதால் எமக்கு நன்மையே கிடைக்கின்றது.

நாம் அனைவருமே சில நாளில் தோன்றி சிலநாளிருந்து சில நாளில் மறைந்து போகும் மக்களுடம்பில் பிறந்தவர்கள். ஆனால் நாமும் அழிந்துபோகும் செல்வத்தையே விரும்புகின்றோம். அதாவது இம்மக்கள் அழிந்து போகும் மாடமாளிகைகள் ஆடை அணி கலன்கள், தட்டு முட்டுக்களையே விரும்புகின்றோம் அன்றி எமது உடல் அழிந்தாலும் எம்முடன் சேர்ந்து வரும் அழியாத கல்விச் செல்வத்தைப் பெறுவதற்கு எவருமே விரும்புவதில்லை.

இதனை "தெய்வச் சிதம்பரத் தேவா உன் சித்தந் திரும்பிவிட்டாற் பொய் வைத்த சொப்பனமாம் மன்னர் வாழ்வும் புவியுமெங்கே மெய்வைத்த செல்வமெங்கே மண்டலீகர் தம் மேடையெங்கே கைவைத்த நாடகசாலையெங்கேயிது கணமயக்கே" எனப் பட்டிணத்துப் பிள்ளையார் பாடியுள்ளார். எமது மனம் அழியாச் செல்வத்தைப் பெறும் ஆசையில் இருந்தாலும் "முத்துச் சிப்பியிலுள்ள முத்தின் ஒளியும்", "பாசி மூடிய பவளத்தின் நிறமும்", "மாசியில் மறைந்த மதியின் துலக்கமும்", "கூடை கவிழ்ந்த விளக்கின் ஒளியும்" போல் நம்மை அறியாமை இருளில் அகப்பட்டவர்களாக்கி நம் அறிவை இழந்து அழியாச் செல்வத்தை அடைய இயலாது நிலையின்றி அழியும் செல்வத்தையே பெறுகின்றோம்.

எம் நாட்டில் ஏழை எளியவர்களிற்கு உதவி எமது நாட்டிற்கு அளப்பெரும் நூல்களை அருளிச் சென்ற பெரியார்களது நூல்களைக் கற்கும் இளைஞர்களைக் காண்பது அரிதிலும் அரிதான ஒரு செயலாகும். கல்வியானது நுண் பொருள் எனச் சிறப்பிக்கப்படுகின்றது. " கல்விச் சிறப்பைத் திருவள்ளுவர் "கேடில் விழுச் செல்வங் கல்வியொருவற்கு மாடல்ல மற்றையவை" எனக் கூறியுள்ளார் ஔவையார். "மன்னனும் மாசறக் கற்றோனுஞ் சீர் தூக்கின் மன்னனிற் கற்றோன் சிறப்புடையவன். மன்னனுக்குத் தன் தேசமல்லாற் சிறப்பில்லைக் கற்றோர்க்குச் சென்றவிடமெல்லாஞ் சிறப்பு" எனக் குறிப்பிட்டுள்ளார். மக்கள் அறிவு வளரப் பல நூல்களைக் கற்றுத் தெளிவதாலேயே விலங்குகளிலிருந்து வேறுபடுகின்றனர். இல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லையேல் விலங்கும் மக்களும் ஒன்றே.

இதனைத் திருவள்ளுவர் " விலங்கொடு மக்கள் அனையர் இலங்கு நூல் கற்றா ரோடு ஏனையவர்" எனவும் " கல்லாதான் ஒட்பங் கழிய நன்றாயினுங் கொள்ளார் அறிவுடையார்" எனவும் "கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரெண்டு புண் ணுடையர் கல்லாதவர்" எனவும் குறிப் பிட்டுள்ளார். முற்காலத்தில் ஔவையார், பூதப்பாண்டியன் பெருந்தேவியார், காரைக் காலம்மையார், மங்கைற்கரசியார் எனும் பெண்களே கல்வியிற் சிறந்து விளங்கிய பெண்மணிகள் ஆவார்கள்.

"பெருந்தடங்கட் பிறைநுதலார்க்கெல் லாம் பொருந்து செல்வமுங் கல்வியும் பூத்தலால் வருந்தி வந்தவர்க்கீதலும் வைகலும் விருந்துமன்றி விளைவனயா வையே" எனக் கல்வியிற் சிறந்த கம்பர் கூறுவதிலிருந்து முற்காலத்தில் கல்வியிற் சிறந்து விளங்கியவர்கள் பெண்கள் என நன்கு விளங்குகின்றது. " குஞ்சி அழகும் கொடுத்தானைக் கோட்டழகும் மஞ்சள் அழகும் அழகல்ல. நெஞ்சத்து நலம்யா மென்னும் நடுவு நிலைமையாற் கல்வி யழகே யழகு" என நாலடியார் எனும் நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. கல்வி கற் றோரிற்குரிய பண்பு என திருமலை நாய னார் "யாவர்க்குமாம் இறைவற்கொரு பச்சிலை யாவர்க்குமாம் பசுவுக்கொரு வாயுறையாவர்க்குமாம் உண்ணும்போது ஒரு கைபிடி யாவர்க்குமாப் பிறர்க்கு இன்னு ரைதானே" எனத் திருமொழியை நம் மனதில் இடையறாது நினைவு கூருகின் றார். ஆகவே, நாம் கல்வியின் சிறப்பை உணர்ந்து இவ்வுலகில் அழியாச் செல்வ மாகிய கல்வியைப் பெற முயற்சிக்க வேண்டும்.

த.சரன்ஷிகா,
10A
யா/இராமநாதன் கல்லூரி.

# ஒளியூட்டும் ஆசிரியர்

நீளத்தை அளக்கலாம்
அகலத்தை அளக்கலாம் – ஆனால்
ஆசிரியர் எம் மீது வைத்திருக்கும்
அன்பை அளக்கமுடியாது.

நாம் நன்றாகப் படித்திட
தாய் போல் பாடுபடும் ஆசிரியர்கள்
அன்பாகக் கல்வி புகட்டி வாழ்வில்
முன்னேற வைக்கும் ஆசிரியர்கள்

காலையில் தினமும் வந்து
கல்வியை அன்பாகப் புகட்டி
நல் விழுமியப் பண்புகளை
விருப்போடு விளக்கிடுவோர்

ஐப்பசி மாதத்து ஆறாம் திகதி
உலக ஆசிரியர் தினமதிலே
ஆசிரியரின் கால் பணிந்து
ஆசி பெற்று உயர்ந்திடுவோம்.

ம.லிந்துசா
7C,
யா/இணுவில் மத்திய கல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூழல் மாசடைதல்

சூழல் மாசடைதல் என்றால் நாம் வாழும் சுற்றுப்புறச் சூழலானது அதாவது, பாடசாலை, வீடு போன்ற பல பொது இடங்கள் மாசடைந்த நிலையில் காணப்படுவதாகும். சூழல் மாசடைவதால், தொற்றுநோய்கள் ஏற்பட்டு அது பாரதூரமான விளைவுகளையும் ஏற்படுத்தும். நாம் வாழும் சூழலை என்றும் சுத்தமாக வைத்திருக்க நாமே முயற்சி கொள்ளவேண்டும். நாம் நோயின்றி நீண்ட காலம் சந்தோசமாக வாழவேண்டுமென்றால் சுத்தமாக இருக்கவேண்டும். சுத்தமாக இருப்பதென்றால் சுற்றாடலை மாசின்றி காத்துக் கொள்ளவேண்டும். மாசுகளில் பல்வேறுபட்ட மாசுகள் காணப்படுகின்றன. அதாவது, நிலமாசு, காற்றுமாசு, சூழல்மாசு, நீர்மாசு போன்ற பல மாசுகள் காணப்படுகின்றன. இவை பற்றி விரிவாக பின்வரும் உதாரணங்களில் பார்ப்போம்.

நிலமாசு அதாவது, நாம் முதலில் நிலத்தில் ஏற்படும் மாசு பற்றிக் கூறுவோமானால், அன்றாடம் பாவிக்கும் பிளாஸ்ரிக் பொருட்கள், பொலித்தீன் பைகள் போன்ற பல கழிவுப் பொருட்களைக் கண்ட கண்ட இடங்களில் வீசுகின்றோம். இதனால் ஏற்படும் விளைவுகளை நாம் முன்கூட்டி அறியாததினாலேயே அப்படிச் செய்கிறோம். அப்படிச் செய்வதினால் நாம் வாழ்வின் உச்சக் கட்டத்தை இளமையிலே இழந்து விடுவோம் என்பதனை மறந்துவிடுகிறோம். இதனை நாம் முளையிலே தவிர்த்து வாழப் பழகவேண்டும்.

காற்றுமாசு இது பற்றி அறியவோமானால் நாம் தூர்நாற்றம் வீசும் பொருட்களை சூழலிலோ, வீதிகளிலோ எறிவதனால் அதனை அனைத்து மனித சமூகமும் சுவாசிக்கின்றது. சுவாசித்தல் கெட்டதாக இருப்பதினால் மனித வாழ்வில் சுவாச நோய்கள் ஏற்பட்டு வாழ்க்கை நிலை பாதிப்படைகின்றது. இதனை நாம் தடை செய்து அப்படியான தூர்நாற்றம் மிகுந்த பொருட்களை புதைத்து வாழ்க்கையை மேம்படுத்திச் செல்லலாம்.

அடுத்து நாம் நீரின் மாசு பற்றி அறிவோமானால் நாம் நீரினை பல்வேறுபட்ட தேவைகளுக்கு பயன்படுத்துகிறோம். நீரின்றி மனிதன் இல்லை. மனிதனுக்கு நீர் மகத்தான செல்வமாகும். அப்படியான நீரினை மாசுபடுத்தல் மனிதன் தன்னைத் தானே அழித்துக் கொள்ள எடுக்கும் முயற்சி. மனிதன் நீரினை எவ்வாறு மாசுபடுத்துகின்றான் எனில் நீரினில் இறந்த பிராணிகளை மற்றும் பாழடைந்த கிணற்று நீரிற்குள் குப்பைகளை கொட்டி விடுகிறான். மற்றும் குளங்களிலே தான் பெரிதாக மாசு ஏற்படுகின்றது. அதாவது மக்கள் அசுத்தமான குளங்களைத் தங்களை சுத்தப்படுத்திக் கொள்ள குளிக்கின்றனர். இதன் மூலம் அவனது உடம்பில் பல்வேறுபட்ட கிருமிகள் நுழைந்து நோய் நிலைமைக்கு ஆளாகின்றனர். இப்படி மனிதனே தன் வாழ்வை தானே முறியடித்துக் கொள்கின்றான். நாம் இதனை எவ்வாறு தடுக்கலாம் எனின் குப்பைகளை உரிய முறையில் அகற்றுதல், நீர் நிலைகளை மாசடையாமல் பாதுகாத்துக் கொள்ளல் மூலம் இதனைத் தவிர்த்துக் கொள்ளமுடியும்.

மேற்கூறியபடி பார்ப்போமானால் மனித வாழ்வின் தடையினை மனிதனே ஏற்படுத்திக் கொள்கிறான். நாம் மேற்கூறியபடி வாழ்ந்தால் நோயின்றி நீண்ட காலம் சந்தோசமாக, அறிவான மனிதனாக உலகில் வாழலாம். "நோயற்ற வாழ்வே குறையற்ற செல்வம்". எமக்கு நோயின்றி வாழ்ந்தால் ஆரோக்கியமான, சிறந்த வாழ்க்கை கிடைக்கும். இதனைத் தெரிந்து கொண்டு இன்று முதல் தொடர்ந்து சுற்றுப்புறச் சூழலை சுத்தமாக வைத்திருக்கத் திடசங்கற்பம் பூணுவோம்.

"சுத்தம் சுகம் தரும்"

**யோ.றமணியா,**
10B, யா/இராமநாதன் கல்லூரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடகத்தில் மொழியும் வசனமும்

> நாடகம் என்பது ஒரு விசித்திர நிலைமையிலிருந்து முகிழ்கின்றது என்பது உண்மை ஆயின் அதை நமக்கு ஓவியமாகக் காட்டுவது மொழி. எனவே நாடகம் உரையாடலிலேயே வித்துவிட்டு விருட்சமாகி, மலர்விட்டு கனியாகின்றது என்பதை நாம் மறக்க முடியாது.
>
> – தமிழறிஞர் இ.இரத்தினம்

கலைகள் யாவற்றுள்ளும் பேச்சு மொழியை முக்கிய அடிப்படையாகக் கொண்டது நாடகம். வரிவடிவில் அமைந்த மொழியிலும் பார்க்கப் பேச்சு மொழி எங்கள் உள்ளத்தை நேரே பலமாகத் தாக்கி உணர்ச்சியைத் தூண்டவல்லது. பேராசிரியர் பேக்சன் பேச்சு மொழி இல்லாவிடின் மனித நுண்மதி வளர்ச்சி அடையாமல் இருந்துவிடும் என்றும் உணர்வுகள் பயனற்றுவிடும் என்றும் கூறியுள்ளார். பேராசிரியர் கே.கணபதிப்பிள்ளை அவர்கள் அக்காலத்திலேயே தமது நாடகங்களில் பேச்சு மொழிக்கே முக்கியத்துவம் கொடுத்திருந்தார்.

எனவே இந்தப் பேச்சுமொழி நாடகத்தில் எப்படி அமையவேண்டும் என்பதை நோக்குவோம். எடுத்த நாடகத்தின் கதையை, கருவைப் படிப்படியாக விரிய வைக்கும் சாதனமாக இது அமையவேண்டும். உண்மையில் நாட கத்தின் செம்பாகம் சூழ்ச்சியும் உரையாடலுமே. சூழ்ச்சி, உரையாடல் என்று இரண்டை யும் விதந்து கூறும் பொழுது உரையாடல் மூலமாகவே சூழ்ச்சி புலப்படும் என்பதையும் உரையாடல் இன்றி சூழ்ச்சி மலராதென்பதையும் நாம் மனதில் பதியவைத்தல் வேண்டும்.

மற்றைக் கலைகளைப் போலவே நல்ல உரையாடலுக்கும் பொருள் பொதிவு முக்கியம். பொருளை முறைபடக் கோத்து ஒன்றிலிருந்து ஒன்று அனுமான வழியில் பெறக் கூடியதாய் வாசகம் அமைதல் முக்கியம். இதிலிருந்து பெறப்படுவது அவ்வுரையாடலுக்கு ஒரு பாணி, ஒரு நடை அமைதல் வேண்டும் என்பதாகும். நடையும் பாணியும் அவ்வுரையாடலை யார் மேடையில் கையாள்கின்றாரோ அவரின் குணசித்திரத்தைப் பொறுத்தவை. கதைப் பாத்திரம் கற்றிந்தவர் அல்லது கல்லாதவர் என்ற குணசித்திரத்தின் இயல்பை அறிந்து உரைநடை அமையவேண்டும்.

எடுத்த கதைக்கும் குணசித்திரத்திற்கும் பொருத்தமான எழுத்துநடைவேண்டும். இந் நடையின் ஆழம் பற்றி எண்ணும் போது சம்பாஷனையோடு இயைந்தவர் மூவர். எழுத்தாசிரியர், நடிகர், சுவைஞர். இவர்களுடன் நான்காவது ஆளாக நெறியாளரையும் சேர்க்க வேண்டும். நெறியாளரின் சிந்தனையுலகு எழுத்தாளரின் உலகுடன் இசையாவிட்டால் நாடகம் அழிந்தே போய்விடும். எழுத்தாசிரியர் அதாவது நாட்காசிரியர், தாம் எழுதும் போது முக்கியமாக இரு இலட்சியங்களை மனதில் வைத்துக்கொள்ளல்வேண்டும். தாம் படைக்கும் கதைப் பாத்திரத்தின் குணவியல்பிற்கு உகந்த நடை எது என்பதும் கேட்போர் உள்ளத்தில் தாம் விரும்பும் செய்தியை அது உணர்த்துகின்றதா என்பதுமே அவை. இது ஆசிரியரின் தனிப் பண்பைப் பொறுத்ததாகும்.

நாடகத்து வசனம் வாய்விட்டு உணர்ச்சியுடனும் செய்கை, சைககளுடன் சேப்படவேண்டியது. எனவே அது நீளமாய் பல சிறு வாக்கியத் தொடர்களைக் கொண்டிருக்கலாகாது. ஆசிரியரின் சிந்தனை ஓட்டத்திற்குச் சிறப்பளித்து இலக்கியச் சுவை பயப்பதாயிருத்தல் மட்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதாது. இப்பண்புகள் அத்தியாவசிய மானவையல்ல. பேசும் பாத்திரத்தின் கட்டத்து உணர்ச்சியை இடரின்றிப் புலப் படுத்தக்கூடிய எளிமை, சம்பாசனையில் இன்றியமையாது இருத்தல் வேண்டும். மற்றைய பாத்திரங்களின் முன்பின் அமைந்த பேச்சுக்களோடு ஒத்த கனமுடையதாய் இது அமைதல் வேண்டும்.

வசனங்களை அமைக்கும்போது அந் தந்தப் பாத்திரமாக ஒன்றி அவை எப்படிப் பேசவேண்டுமோ அப்படி வாயால் விட்டுச் சொல்லி எழுதுதல் வேண்டும். பேச்சுக் களை நின்றோ, நடந்தோ, உலாவியோ, கோபித்தோ, கெஞ்சியோ, உரத்தோ, நலிந்தோ பேசவேண்டும். என்ற குறிப்புக் களை ஆசிரியர் எழுதி உதவுதல் வேண் டும். பேசும் பொருளின் விழுமை, இழிவு, உணர்சிவேகம், இவற்றிற்கேற்ப நடை, சொல், சொற்தொடர் ஆகியன இறுக வேண்டும் அல்லது நெகிழவேண்டும்.

நல்லதொரு நாடகவாசகம் ஆசிரிய ரின் தனிப்பண்பிற்கும் நடிகர்களின் பல திறப்பட்ட வாசகத்திற்கும் ஓர் இனிய ஒரு மைப்பாட்டை இலட்சியமாகக் கொள்ள வேண்டும். நாடகத்தில் உணர்ச்சி உயர் வுக்கேற்ப செந்தமிழிற்கும் கவிதைக்கும் காவிய நடைக்கும் இடமுண்டு. ஒரு நாட கத்திற்கு மொழியும் வாசகமும் எவ்வகை யில் முக்கியத்துவம் பெறுகின்றன என் பதை அறிந்துகொள்ள முடிந்துள்ளது.

நன்றி : நாடக அரங்கு.

---

# கலை இலக்கிய எழுத்தாளர் குறித்த கருத்துக்கள்

சமுதாயத்திலிருந்து விலகி நிற்கும் ஆசாடபூபதி எழுத்தாளன் ஆவதில்லை. சமுதாய நீரோட்டத்தில் இரண்டறக் கலந்து எதிர்நீச்சல் போடுபவனே எழுத்தாளன் ஆவான். அத்தகைய எழுத்தாளன் மக்களி டையே வேரூன்றியுள்ள வேண்டாத மூட நம்பிக்கைகள், ஒருவனை ஒருவன் ஏமாற் றிப் பிழைக்கும் கயமைத்தனங்கள், திடீர்ப் பிரமுகர்களின் போலித்தனங்கள் போன்ற நாசசக்திகளை அம்பலப்படுத்தி மக்களை விழிப்படையச் செய்வான்.

ஆக்கபூர்வமான இலக்கியவாதியின் சார்புடைமைஒருபோதும்தானாகத்தோன்று வதில்லை. வாழ்க்கைக் கொந்தளிப்பிலே அது உருவாகின்றது. வாய்மை, அழகு சிலருக்குக் கசப்பாக இருக்கின்றது. உண்மை கசப்பல்ல. உண்மையை மறைப்பவர்க்கே அது கசப்பாகிறது. எனவேதான் எழுத்தா ளர்கள் யதார்த்தப் போக்கை முன்னிறுத்தி எழுதிவருகின்றார்கள்.


'ஜனரஞ்சகம்' என்ற பாமரத்தனமான கோஷம் பலவீனமேயன்றி இலக்கியம் அல்ல என்பதைக் காலம் எப்போதும் நிரூ பித்துவிடுவதை சிலர் உணர்ந்து கொள்வ தில்லை.

எழுத்தாளன் வரித்துக்கொண்ட ஏதா வது ஓர் இலட்சியத்திலிருந்துதான் இலக் கியங்கள் பிறக்கின்றன. அந்த வகையில் அவனது எழுத்துக்கள் சமுதாயத்தில் ஏதோ ஒருவகையில் பங்களிப்புக்குள்ளா கின்றன. எந்தவோர் இலட்சியமுமின்றி எந் தப் படைப்பாளியும் இலக்கியங்களைப் படைப்பதில்லை. சமுதாய மாற்றத்துக்கு இவ்வகையான இலக்கியங்கள் உந்து சக்தியாகத் திகழ்வதால்தான் அவ்விலக்கி யங்கள் சமுதாயத்தில் தாக்கத்தை ஏற் படுத்திக்கொண்டிருக்கின்றன.

இலக்கியங்கள் சமுதாயத்தின் நடை முறை வாழ்க்கையைச் சித்திரிப்பது மாத் திரமல்ல, அச்சமுதாயத்தை மாற்றும் கருவி யாகவும் விளங்கவேண்டும். இதுவே தர மான இலக்கியத்துக்கு இலக்கணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உங்கள் விருந்து

## 'இணுவில் ஒலி' நாற்றிசையும் பரவட்டும்

இலங்கை தமிழ்ச் சஞ்சிகை வரலாற்றில் புதிய அத்தியாயமே தாயக மண்ணின் தனித்துவம் காக்கும் இரு திங்கள் ஏடாக 'இணுவில் ஒலி' யின் வருகை. "விளையும் பயிரை முளையிலே தெரியும்" என்பதற்கிணங்க "இணுவில் ஒலி" யின் கன்னி இதழ் கல்லூரி மாணவன் முதல் பல்துறைசார் பிரமுகர்கள் வரை அவர்கள் அன்றைய இன்றைய இணுவில் மகிமையை மையமாக வைத்து பல்வேறு தலைப்புக்களில் கட்டுரைகளை அழகு தமிழில் தரமாக படைத்துள்ளதோடு பல்வேறு அறிஞர்களின் சிந்தனைகளையயும் இணைத்துள்ளமை சிறப்பம்சமாகும்.

நாற்பத்தி நான்கு பக்கங்களில் பல்வேறு சிறப்புத் தகவலோடும் சீரான பக்கவடிவமைப்புடனும் வெளியான ".இணுவில் ஒலி"யின் முன் அட்டையில் இணுவிலின் வரலாற்று பெருமைமிக்க நான்கு திருத்தலங்களின் முகப்புத்தோற்றமும் அதற்குப் பின்னணியில் இயற்கைச் சோலையையும் தமிழிசை சக்கரவர்த்தி இணுவை வீரமணி ஐயரின் கம்பீரத்தோற்றமும் ஆன்மீகச் சிறப்பை வலியுறுத்துகின்றன.

'இணுவில் ஒலி' இதழ்களை தொடர்ச்சியாகச் சேகரித்து இணுவில் மகிமைப் பொக்கிசத்தை எதிர்கால சந்ததியினருக்கு வாசிக்கச் செய்வதோடு இணுவிலைப் பற்றி பல்வேறு ஆய்வுகளில் ஈடுபடுவோருக்கு வழிகாட்டியாகவும் அவை அமையவேண்டும்.

தங்களின் பல்வேறு செயலாற்றலால் பல்வேறு துறைசார் பிரமுகர்களினதும் வாசகர்களினதம் நல்லெண்ணத்தோடும் ஆசியுடனும் 'இணுவில் ஒலியின்' ஆசிரியராக உள்ளீர்கள்.


'இணுவில் ஒலி' நாற்றிசையும் பரவட்டும் தங்களின் பரந்தசேவை விரிவடையட்டும்.

நல்வாழ்த்துக்கள்!

தசிஞாரன்
கொழும்பு – 15.

---

## புதிய அத்தியாயம் படைக்கும்



'இணுவில் ஒலி' இரண்டாம் இதழ் கண்டேன். இணுவில் மக்களின் கல்வி வளத்தை உணர்த்தும் வகையில் மூன்று கல்லூரிகள் அங்கு சேவையாற்றுவது மண்ணின் பெருமையைப் பறைசாற்றுவதாக அமைந்துள்ளது. வடிவேற்சுவாமிகள் பற்றிய கட்டுரை அவரின் சேவையினை எமக்கு உணர்த்துவதாக அமைந்துள்ளது. இன்றைய எமது தாயகத்தின் அவலங்களை பேனா முனையிலே ஆசிரியர் துணிவுடன் தீட்டியுள்ளார். 'தொல்காப்பியத்தின் சிறப்பு' பற்றிய பகுதி அரிய விடயங்களைத் தந்துள்ளது. பண்பாட்டுப் பாரம்பரியத்தில் இணுவில் மண்ணின் பெருமை தெரிகிறது. 'சிறுவர் கல்விச் சிந்தனைகள் : ஒரு நோக்கு' என்னும் இணுவையூர் த.சிவசுப்பிரமணியத்தின் கட்டுரை ஆய்வு நோக்கில் தமிழ்ப்புலவர்களை முன்னிலைப்படுத்தி புதுமையான கருத்துக்களைத் தந்துள்ளது. 'புலம்பெயர் நாட்டில் இணுவில் மக்களின் பங்களிப்பு' பற்றிய விடயங்களை வாசிக்கும்போது எமது பிள்ளைகளின் கலை ஆர்வத்தை மெச்சாமல் இருக்க முடியவில்லை. ஜேர்மனியிலிருந்து ஓர் அன்பர் யோகாசன அனுபவ உண்மைகளை எல்லோரும் புரியும்படி விளக்கியுள்ளார். 'ஆடற்கலை' என்னும் மகுடத்தில் வரைந்த கட்டுரை பரதநாட்டியம் பற்றி பல சிறப்பான உருப்படிகளைக் காட்டி நிற்கிறது. இன்னும் எத்தனையோ அம்சங்களைத் தாங்கி வெளிவந்திருக்கும் 'இணுவில் ஒலி' சஞ்சிகை வரலாற்றில் புதிய அத்தியாயம் படைப்பதாகவே அமைந்துள்ளது. சஞ்சிகை ஆசிரியருக்கும் அவர் தம் குழுவினருக்கும் எனது நல்வாழ்த்துக்கள்.

– சம்பந்தர் கோணேஸ்வரன்
நிலாவெளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் பண்பாடும் தைப்பொங்கலும்

ஓர் இனத்தின் நடத்தைகளே - வாழ்க்கையை நடத்தும் முறைகளே - பண்பாடு எனப்படும். இது முந்திய சந்ததியிலிருந்து அடுத்த சந்ததிபெற்றுக்கொள்ளும் செல்வமாகும்.

நடத்தைகள் எல்லாம் பண்பாடு அல்லது கலாசாரம் அல்லது நாகரிகம் என்று சொல்லப்பட்டாலும் நீர் என்றால் நன்னீரையே குறிப்பது போல நன்னடத்தைகளே பண்பாடு எனப் போற்றப்படும். பண்பட்டதே பண்பாடு ஆகும்.

ஓர் இனத்தை அடையாளப்படுத்துவது அந்த இனத்தின் பண்பாடேயாகும். நமது நடத்தைகள் அனைத்திலும் பண்பாடு தங்கியுள்ளது. சிறப்பாக நமது பெயர், உடை, உணவு, உறையுள், உபசரிப்பு முறை, உறவாடும் முறை, நமது சடங்குகள், விழாக்கள், ஒழுக்கமுறைகள் அனைத்திலும் பண்பாடு தங்கியுள்ளது.

தைப்பொங்கல் தமிழரின் விழாக்களில் மிக முக்கியத்துவம் வாய்ந்தது. நமது பண்பாட்டின் முக்கிய கூறுகள் பலவற்றைத் தைப்பொங்கலில் காணலாம்.


பண்டைத் தமிழர்கள் வானியல், புவியியல் இரண்டையும் நன்கு அறிந்திருந்தனர். அதற்கேற்பத் தமது வாழ்வியலையும் வகுந்து வாழ்ந்தனர்.

### தைப்பொங்கல் நாள்

நாம் வாழும் பூமி தன்னைத்தானே சுற்றிக்கொண்டு சூரியனையும் சுற்றிவருகின்றது. அதனால் பருவகாலங்கள் தோன்றுகின்றன. பருவகாலங்களுக்கேற்ப உயிரினங்களும் மரஞ்செடி கொடி பயிர்களும் வாழ்வு பெறுகின்றன.

நம் முன்னோர் சூரிய வீதியாகிய வான வட்டத்தைப் பன்னிரண்டு இராசிகளாக வகுத்தனர். ஒவ்வொரு இராசியிலும் சூரியன் வலம் வரும் காலத்தை இராசிப்படி பன்னிரண்டு மதாங்களாக வகுத்தனர்.

மேடராசியில் சூரியன் வலம் வரும் காலம் சித்திரை எனவும், இடபராசி வைகாசி எனவும், மிதுனம் ஆனி எனவும் கடகம் ஆடி எனவும், சிங்கம் ஆவணி எனவும், கன்னி புரட்டாசி எனவும், துலாம் ஐப்பசி எனவும், விருட்சிகம் கார்த்திகை எனவும், தனு மார்கழி எனவும், மகரம் தை எனவும், கும்பம் மாசி எனவும், மீனம் பங்குனி எனவும் காலங்களுக்குப் பெயர் சூட்டினர். நமது விழாக்கள் நடைபெறும் காலங்களும் இதன் அடிப்படையில் வகுக்கப்பட்டிருப்பதைக் காணலாம்.



கலாபூஷணம் சைவப்புலவர் சு.செல்லத்துரை

தைப்பொங்கல் சூரியன் மகர ராசிக்கு வருகின்றதை மாதம் முதல் நாளாகக் கொள்ளப்படுகின்றது. இதற்குக் காரணம் வானவீதியில் சூரியன் ஒரு வருடத்தில் தை முதல் ஆனி முடிய ஆறு மாத காலம் வடக்குப் பக்கம் சரிந்தும் ஆடி முதல் மார்கழி முடிய ஆறு மாதம் தெற்குப் பக்கம் சரிந்தும் வலம் வரும். இதிலே வடக்கே சரிந்துவரும் கால ஆரம்பம் மகராசியாகிய தை மாதம் முதல் நாள் ஆகும். அந்த நாளே தைப்பொங்கல் நாள். சூரியன் வான வீதியில் மகரராசிக்கு வரும் நாளே தைப்பொங்கல். இது உத்தாராயண புண்ணிய கால ஆரம்பமாகும். ஆடி முதல் மார்கழி வரை வரண்டு கிடந்த பருவ காலமும் இயற்கையும் தைமுதல் ஆனி வரை வளம் பெறுகின்றன. உயிரினங்களும் வளம் பெற்று வாழ்கின்றன.

### முற்றத்தில் பொங்கல்

தைமுதல் நாளில் முற்றத்தில் மங்கல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மான முறையில் பொங்கல் இட்டுப் படைத்துச் சூரியனுக்கு நன்றி செலுத்தப்படுகின்றது. பூமிக்கு வெப்பமும் ஒளியும் தந்து மழை தந்து அதன் மூலம் விளைவுதந்து நம்மை வாழவைக்கும் சூரியன் நன்றி கூரப்படுகின்றான். சூரியனின் உதவியால் வயலில் விளைந்த நெல்லை அறுவடை செய்து வந்து அந்த அரிசியால் பொங்கலிட்டுச் சூரியனை வணங்குகின்றோம். பண்பாட்டில் நன்றிசெலுத்துதல் முதன்மை யானது. வள்ளுவர் பெருமான் தன் அற நூலில் செய் நன்றி அறிதல் என ஓர் அதிகாரத் தையே வைத்துள்ளார். அதனால் சூரியனுக்கு நன்றி செலுத்தும் விழாவாகவே தைப்பொங்கல் அமைகின்றது. மனித நாகரித்தின் உச்சம் நன்றி செலுத்துதல் ஆகும்.

மறுநாள் பட்டிப் பொங்கல் பொங்கப்படுகின்றது. உழவனின் தொழிலுக்கு உபகாரியாயிருக்கும் மாடுகளுக்கு நன்றி செலுத்தும் பொங்கலிது. எருதுகள் வயல் உழுதும் வண்டி இழுத்தும் உதவ, பசுக்கள் பால் தந்து உதவ எருதுகள், பசுக்கள், கன்றுகள் எல்லாமே எரு தந்து வயல்விளைக்க உதவுகின்றன. அதேவேளை நாம் கழித்துவிடும் புல்லையும் வைக்கோலையும் தவிட்டையும் கழு நீரையுமே உண்டு தம் பயனை முழுமை யாக எமக்குத் தரும் மாடுகளுக்கு நன்றி செலுத்தும் பொங்கல் பண்பாட்டின் உச்சம் அல்லவா...!

தைப்பொங்கலில் உடை, உறையுள், உணவு, உபசரிப்பு, உறவாடல், விழாச் செய்தல் முதலான நமது பண்பாட்டுக் கோலங்கள் அத்தனையையும் காண முடிகிறது.

பொங்கிய புற்கையைப் படைத்து நன்றி செலுத்தி வணங்கிய பின் அதனை உற்றார், உறவினர், நண்பர்கள், ஆதரவற்றோர் அனைவர்க்கும் பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பும் பண்பாடும் பரிமளிக்கிறது அல்லவா!

ஆகவே தைப்பொங்கல் விழா தமிழரின் நன்றித்திருநாள் விழா. பண்பாட்டின் உச்சமான விழா என்பதை நினைவோம். வானியலில், புவிவியலில், வாழ்வியலில் உயர்ந்து நிற்கும் தமிழரின் பண்பாட்டின் சின்னம் இதுவெனக் கொள்வோம்.

●

அறிவியல்

# பிறப்பின் ரகசியம்

உயிர் என்பது நமது உடலில் உள்ள செல்களில் தான் ஒளிந்து இருக்கிறது. உடலில் மொத்தம் 10 கோடி செல்கள் உள்ளன. ஒவ்வொரு செல்லின் மையத்தில் இருக்கும் உட்கரு என்று சொல்லக்கூடிய நியூக்ளியஸில் 23 குரோமோசோம்கள் உள்ளன. இந்தக் குரோமோசோம்களில் 'டி.என்.ஏ' என்று சொல்லக்கூடிய 'டி ஆக்ஸ்ரிபோ நியூக்ளிக் அமிலம்' உள்ளது. முறுக்கப்பட்ட ஏணி வடிவம் கொண்ட இந்த டி.என்.ஏ யை விரித்தால் அது 5 அடி நீளமாக இருக்கும். இதுதான் நமது உயிரின் வேர். இதில்தான் ஜீன்கள் உள்ளன.

நாம் கருவில் இருக்கும்போது நமது பெற்றோர்களின் உடல் அமைப்பு, குணங்கள், பரம்பரை நோய்கள் போன்றவற்றை ஜீன்கள் நமக்குக் கொண்டு வந்து சேர்க்கின்றன. நமது உயிரின் ரகசியமே ஜீன்களில்தான் உள்ளது என்பதை அறிவியல் கண்டு பிடித்துவிட்டது. 'ஹியூமன் ஜீனோம்' என்ற விதிப்படி மனிதன் மற்றும் உள்ள உயிரினங்களின் ஜீன்களில் உள்ளே என்ன பதியப்பட்டு இருக்கிறது என்பதை தனித்தனி வகையாகப் பிரித்து ஆராய்ந்து கொண்டிருக்கிறார்கள். இன்னும் சில ஆண்டுகளில் ஜீன்கள் பற்றிய விவரம் முழுவதையும் மனிதன் அறிந்துகொள்வான். நாம் நம்பிக்கொண்டிருக்கின்ற பல கருத்துக்கள் மாறக்கூடும். நமது பிறப்பின் ரகசியத்தை விரைவில் நாம் முழுமையாக அறிந்துகொள்வோம்.

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திறனாய்வு

**09.12.2012 தொடக்கம் இலங்கையிலிருந்து புதிதாக வெளிவந்து கொண்டிருக்கும் 'தமிழ்த்தந்தி' என்ற வாரப் பத்திரிகையில் எமது மண்ணின் எழுத்தாளர் 'இணுவில் உத்திரன்' எழுதிய 'அவளுக்கென்று ஒரு மனம்...!' என்னும் சிறுகதை பிரசுரமாகியுள்ளது.**

## 'அவளுக்கென்று ஒரு மனம்...!' - கதை பற்றிய ஒரு மேலோட்டம்!

இரண்டு கதாபாந்திரங்களின் சம்பாசனையின் ஊடாக 'அவளுக்கென்று ஒரு மனம்....' என்னும் கதை நகர்த்திக் செல்லப்படுகின்றது. ஒருதலைக் காதலின் உணர்ச்சிப் பிரவாகம். பெண் மனம் ஆழமானது. அந்த ஆழத்தைக் கண்டறிவது மிகவும் கஷ்டமானது. ஆனால் ஆண்களோ ஒரு பெண் கதைத்துச் சிரித்துப் பழகினால் அதைக் காதல் என்று எண்ணி அதனால்படும் அவஸ்தைகள் ஏராளம். அதன் முடிவை அறிந்து கொள்ள வேண்டும் என்ற ஏக்கம் மனத்தைப் போட்டுக் குடைய ஆண் பலவீனமடையும் நிலையைப் பார்க்கின்றோம்.

ஆண்களுடன் பெண்கள் நட்பாகப் பழகுவது தவறா? நட்பாகக் கதைத்துப் பழகிவிட்டால் அதைக் காதல் என்று எண்ணுவது எப்படி? புரிந்த மனிதர்கள் புரியாத மனிதர்களாக மாறுவது மனச்சலனமே என்பதை அவர்கள் உணராமல் இருப்பது ஒரு பலவீனமே! "ஆண்கள் ஒரு பெண்ணின் மனத்தைப் பார்ப்பதில்லை. அவளின் உடம்பைத்தான் பார்க்கிறார்கள்." என்பதை அனேகமான பெண்கள் அறிந்து வைத்திருப்பதில்தான் அவர்கள் தங்களுடன் பழகும் அண்களை மனத்தாலும் சற்றுத் தள்ளிவைத்திருக்கிறார்கள். மனதில் ஒருவித உணர்ச்சிக் கொந்தளிப்பு இருந்தாலும் அதைவெளிக்காட்டாமல் மனதுக்குள் அடக்கி வைத்துக்கொண்டு வாழும் பெண்கள் சமுதாயத்தில் உலா வருகின்றார்கள்.

"நான் ஆண், அவள் பெண் என்ற இனப்பாகுபாட்டையோ ஈகோக்களையோ கைவிட்டு அவளிடம் மன்னறாடியாவது கேட்டுக்கொள்ளவேண்டும்" என்ற நினைக்கும் இக்கதையின் கதாநாயகன், ரோகினி என்ற பெண்ணிடம் ஒரு தலைப்பட்சமாகத் தனது எண்ணத்தை, விருப்பத்தைத் தெரிவிக்கவிரும்புவது ஒரு பலவீனமே தவிர அன்பின் ஆழத்தைக் காணமுடியவில்லை. இதைப் பழகுவதிலும் கதைப்பதிலும் அவதானித்ததினாலோ என்னவோ.... ரோகினி பழகின தோசத்தினால் கதைத்தாளே தவிர தனது மனத்தைத் தூரவே வைத்துக் கொண்டாள். 'காதல் புனிதமானது' அதற்கு இவன் ஏற்றவனல்ல என்பதை உணர்ந்ததனால் ஒதுங்கவே முற்பட்டாள். 'அடிக்க அடிக்க அம்மியும் நகரும்' என்று சொல்வார்கள். அதனால்தான் நட்பை வேண்டி நிற்பவனிடம் நம்பிக்கை இருக்கு என்று சொல்லிவிட்டு.... "எனக்கு என்மேல்தான் நம்பிக்கை இல்லை...!" என்று ரோகினி சொல்வது பருவத்தின் பண்பாகவும் இருக்கலாமல்லவா? ஒரு பெண்ணைக் காதலித்தவன், அவளால் காதலை ஏற்றுக் கொள்ளாத போது மனம்மாறி "நட்பு என்கின்ற அந்தப் புனிதமான உறவின் மேல் ஆணையாகச் சொல்லுறன் என்னுடைய மனதிலை இருக்கிறது இப்போ நட்பு என்கின்ற அந்தக் காத்திரமான உறவுதான்" என்கின்றான். காதலித்தவளை நண்பியாக சொல்லளவில் ஏற்றுக்கொண்டாலும் மனத்தளவில் அவள் மேல் கொண்டுள்ள காமம் மறைந்து விடுமா? என்ன? இக்கதையில் மனித பலவீனங்கள் தொட்டுக் காட்டப்பட்டுள்ளன. ●

- தேடலோன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முற்போக்கு இலக்கியம்

■ சி.அருந்தவன்

இலங்கையின் நவீன தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கும் செழுமைக்கும் முற்போக்கு இலக்கியம் பெரும் பங்களித்துள்ளது. முற்போக்கு இலக்கிய வரலாற்றில் இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் ஒரு மைல் கல். இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் ஐம்பதுகளில் கே.கணேஷ், கே.ராமநாதன், அ.ந.கந்தசாமி, பிரேம்ஜி ஞானசுந்தரம் ஆகியோரது முன்முயற்சியால் ஆரம்பிக்கப்பட்ட போதும், அச்சங்கம் அறுபதுகளிலிருந்து எண்பதுகள் வரை வீரியத்துடன் செயப்பட்டுள்ளது. இதன் செயற்பாடுகளைச் சரியான பாதையில் நெறிப்படுத்தி பல சாதனைகளை நிலைநாட்டியவர்களில் பேராசிரியர் க.கைலாசபதி முதன்மையானர்.

முற்போக்குப் படைப்பாளிகள் வீரியமுள்ள, செழிப்பான, அர்த்தபுஷ்டியுள்ள படைப்பாக்கங்களை புனைந்துள்ளனர். சிறுகதை, நாவல், கவிதை, விமர்சனம், நாடகம் ஆகிய துறைகளில் தடம்பதித்து ஈழத்து இலக்கியத்தை உலகறியச் செய்தனர். இலக்கிய அந்தஸ்தைப் பெற்றுக் கொடுத்தனர். நாவல் இலக்கியத்தைப் பொறுத்தளவில் இளங்கீரன், செ.கணேசலிங்கன், கே.டானியல், செ.யோகநாதன் ஆகியோரின் படைப்புக்கள் புதிய செல்நெறியில் பயணித்துள்ளதுடன் செழுமையானவையாகவும் உள்ளன.

முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தினால் முன்னெடுக்கப்பட்ட மரபுப் போராட்டம் வெற்றி கண்டதன் விளைவாக கவிதைத் துறையில் பலர் தமது செல்வாக்கைத் செலுத்தலாயினர். கவிதைத் துறையில் சாதனை புரிந்தவர்கள் வரிசையிலே இ.முருகையன், எம்.ஏ.நுஃமான், க.பசுபதி, சில்லையூர் செல்வராசன், சுபத்திரன், சாருமதி ஆகியோர் முக்கியமானவர்கள். சிறுகதைத் துறையில் பலர் தடம்பதித்து எழுதிவந்துள்ளனர். என்.கே.ரகுநாதன். கே.டானியல், டொமினிக் ஜீவா, நீர்வை பொன்னையன், எஸ்.அகஸ்தியர், காவலூர் இராசதுரை, பெனடிக்ற்பாலன், தெணியான், செ.யோகநாதன், செ.கதிர்காமநாதன் போன்ற படைப்பாளிகள் காத்திரமான பங்களிப்பை வழங்கியுள்ளனர். நாடகத்துறையைப் பொறுத்தளவில் சுந்தரலிங்கம், தாசீசியஸ், சிவானந்தன் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். முற்போக்கு இலக்கிய விமர்சனங்களை முன்னெடுத்தவர்களில் பேராசிரியர் க.கைலாசபதி, பேராசிரியர் கா.சிவத்தம்பி, கவிஞர் இ.முருகையன் ஆகியோர் முக்கியமானவர்கள்.

பேராசிரியர் க.கைலாசபதி தமிழ் இலக்கிய விமர்சன ஆய்வுத்துறையில் முதல் முதலாக மார்க்சிய வழிமுறையைக் கையாண்டு அதை முன்னெடுத்தார். அவரது மார்ச்சிய விமர்சன ஆய்வு அணுகுமுறை தமிழ் இலக்கியத்திற்கு ஒரு புதிய பரிமாணத்தைக் கொடுத்தது. அவரின் நிகரில்லாப் பங்களிப்பால் தமிழ் இலக்கியம் வலுப்பெற்றது.

பேராசிரியர் க.கைலாசபதி அவர்கள் இரண்டு தசாப்த காலமாக முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் தலைமைக்குழு உறுப்பினராகச் செயற்பட்டார். இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் திட்டத்தையும் கோட்பாட்டையும் வகுப்பதிலும் செயற்படுத்துவதிலும் பெரும் பங்காற்றியுள்ளார். இலங்கைத் தமிழ்ப் பண்பாட்டை ஒரு புதிய தளத்துக்குக் கொண்டு செல்வதற்கு முன்னின்று உழைத்தார்.

மேலும் படைப்புத்துறையில் ஈடுபட்டுள்ள முற்போக்குப் படைப்பாளிகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சபா ஜெயராஜா

நெறிப்படுத்தி, விமர்சித்து வழிநடத்தியவர்களில் க.கைலாசபதியவர்கள் பங்களிப்பு அளப்பரியது. அந்த வகையில் அவரது பல்கலைக்கழக மாணவராகிய சபா ஜெயராசாவும், அவரது வழி நடத்தலில் இலக்கியத்துறையில் கால் பதித்த தம்பு சிவசுப்பிரமணியமும் இன்று ஆற்றல் மிக்க படைப்பாளிகளாக இலக்கிய உலகில் முகிழ்ந்து நிற்கின்றனர். அவர்கள் இருவரும் இணுவில் மண்ணின் பெருமையை நிலை நாட்டிக் கொண்டிருக்கிறார்கள்.



தம்பு சிவா

# நிறுவனரிடமிருந்து....

**உங்களுடன் சில மணித்துளிகள் மட்டும் எனது உறவுப் பரிமாறல்.....**

குடும்ப இதழான "இணுவில் ஒலி" உங்கள் கரங்களுக்கு வந்துவிட்டன. முதல் பிரசுரத்திற்குக் கிடைத்த ஆதரவு அளப்பரியது. அதனால் மட்டற்ற மகிழ்ச்சி.

வீட்டுக்கு வீடு வளரும் குழந்தைகளை எப்படிக் கவனித்து வளர்க்கிறீர்களோ அதே பாசத்துடன் "இணுவில் ஒலி"க் குழந்தையையும் வளர்த்தெடுக்க வேண்டியது உங்கள் கடமையாகும்.

வெளிவந்த முதல் இதழில் இருந்து இணுவில் மக்கள் அதன் மீது கொண்டுள்ள அக்கறையும், ஆதரவும் தொடர்வதை அறிகிறேன். இது இன்னும் வேகமடைய வேண்டும்.

"இணுவில் ஒலி" மக்களுக்காக, மக்கள் நலன்களுக்காக, மக்கள் வளர்ச்சிக்காக, மக்களின் சுபீட்சத்துக்காக, மாணவர்களின் மேம்பாட்டிற்காக, விவசாயப் பெருமக்களை ஊக்குவிப்பதற்காக, தொழில் அதிபர்களை உன்னதப் படுத்துவதற்காக, வர்த்தகத்தில் உள்ளவர்களை வளம்பெறச் செய்வதற்காக – இப்படி நமது கிராமத்தின் வளர்ச்சிக்கு எல்லா வகைகளிலும் முன்னேற ஒரு சக்தியாக இருக்கும். எமது நோக்கமும் அதுதான். உங்கள் ஆசையும் அதுவே.

இந்தப் பணியை "இணுவில் ஒலி" தனது தலையாய கடமையாக மதித்து அதற்கமைந்த செய்திகளுடன் வெளிவரும் என்பதை உறுதிசெய்கிறேன்.

போர்ச் சூழலினால் புலம் பெயர்ந்த எமது கிராம மக்கள் உலகெலாம் பரவி வாழ்கிறார்கள். அவர்களையும் எமது கிராமத்தின் வளர்ச்சியில் பங்காளிகளாக்கி அவர்களை ஒன்றிணைக்கும் ஒரு பாலமாக "இணுவில் ஒலி" ஒலிக்கும் என்பதை இங்கு உறுதியாக எல்லோரும் எதிர்பார்க்கலாம்.

"இணுவில் ஒலியின்" வளர்ச்சிக்கு பங்களிப்பைச் செய்து ஆதரிப்பது மக்களின் கடமையாகும்.

"இணுவில் ஒலி"யை தன்னலங்கருதாது அதன் நோக்கத்திற்கு அமைய ஆக்கம் செய்துதரும் அதன் ஆசிரியருக்கும், சஞ்சிகைக் குழுவினருக்கும் எனது நன்றியும் பாராட்டும். இவர்கள் பணிதொடர நாம் உதவிக் கரம் நல்குவோமாக!

**நடராசா சச்சிதானந்தன்**
**(இலண்டன்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குழந்தையினுடைய கல்வி வளர்ச்சியில் பரம்பரையும், சூழலும்

**சைவப்புலவர் திருமதி தயாளினி செந்தில்நாதன்**
B.A (Hons) M.A,MED, Dip - in - Edu.
***ஆசிரியர், யா/இணுவில் இந்துக் கல்லூரி***

ஒரு குழந்தையினுடைய கல்வி வளர்ச்சியில் பரம்பரை, சூழல் ஆகிய இரண்டும் பங்கேற்கின்றன. கல்வி வளர்ச்சி என்பது மரபு மற்றும் சூழல் ஆகிய இவ்விரண்டின் கூட்டு விளைவே ஆகும். அதாவது மரபின் தாக்கம் பிறவியிலேயும், சூழலின் தாக்கம் வளரும் போதும் நிகழ்கின்றன. ஒரு குழந்தையானது தாயின் வயிற்றில் வளரும் போதே சூழலின் செல்வாக்கு அக்குழந்தையில் ஆதிக்கம்செலுத்துகிறது. குழந்தை வளர்கின்ற சூழ்நிலையானது பரம்பரை அலகுகளால் எழும் பண்புகளின் இயல்புகளை மாற்றியமைக்கும். ஒரு பிள்ளையின் வளர்ச்சிக்குப் பரம்பரை இயல்புகளும். அப்பிள்ளை வளர்கின்ற சூழலும் இன்றியமையாததாகும்.

**கற்றல் வளர்ச்சி**

*01.* பரம்பரை –

- பரம்பரை அலகு
  குணம் (ஆளுமை) இயல்புகள்
  (தாங்கும் சக்தி)
  விவேகம் (80%)

*02.* சூழல் –

- குடும்பம் – தாய், தந்தை, உடன் சகோதரர்கள், வீட்டுச் சூழல், வகிபங்கு, கூட்டுக் குடும்பம்
- சமூகம் – சகபாடிக்குழுக்கள், பெரியோர்கள், முதியவர்கள், அயலவர்கள், சமூக – பொருளாதார நிலை, அமைப்புக்கள் (சமூகம், விளையாட்டு, சமயம்), பண்பாடு, கலாசாரம் (கலை நிகழ்வுகள்), தொடர்பு சாதனங்கள், உரிமைகளை மதித்தல், இணக்கப்பாடும் உறவு நிலையும்.
- கல்வி – ஆசிரியர், வகுப்பறை, முன் பள்ளிச் சூழல், பாடசாலைச் சூழல், தனியார் கல்வி நிறுவனங்கள்.
- அனர்த்தம் – நெருக்கீடு, இயற்கை அனர்த்தம், செயற்கை அனர்த்தம், பிறப்பு முன்போசாக்கு, விவேகம் (20%)

**பரம்பரையும், சூழலும்**

கரு உருவாகும் போதே பரம்பரை இயல்புகள் நிர்ணயிக்கப்படுகின்றன. பரம்பரை இயல்பானது ஆரம்பத்தில் ஒரு நிலையான காரணியாகவிருந்து வளர்ச்சியின் பல்வேறு சூழற் காரணிகளுக்கேற்ப உருப்பெறுகின்றது. கருவில் இரசாயனப் பதார்த்தங்களைச் சூழலாகக் கொண்டு ஆரம்பிக்கும் நிலைமை பின்னர் உற்றார், பாடசாலை, சமூகமெனச் சிக்கலான சூழலாக விரிவடைகின்றது.

எனவே பிள்ளை கல்வி வளர்ச்சியின் போது பரம்பரையும், சூழலும் இணைந்தே தொழிற்படுவதாக ஆய்வுகள் கூறுகின்றன.

உதாரணமாக உளப்பிறபோக்கிற்குப் பரம்பரை மட்டும் காரணமன்று. ஒரு வளர்ச்சியில் ஏற்பட்ட சூழல் ஒழுங்கீனம், தொற்று நோய் ஆகியனவும் காரணமாகும். சில பிள்ளைகளிடம் மதுபானம் அருந்துதல், களவு, விபச்சாரம் போன்ற தீய பழக்கங்கள் இருப்பதைக் காணலாம். இவை பரம்பரைக் காரணிகளாலும் ஏற்படலாம். தந்தையின் பழக்கங்களாகிய சூழற் காரணிகளாலும் ஏற்படலாம். இதில் இருந்து அறிவு வளர்ச்சியில் மரபும், சூழலும் பங்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகிக்கின்றன என்பதை அறியலாம்.

**பரம்பரை**

பெற்றோரிடமிருந்து பிள்ளை சந்ததி சந்ததியாகப் பெற்றுக் கொள்கின்ற இயல்புகளுக்கான காரணிகளை பரம்பரைக் காரணிகள் எனலாம். அதாவது, தாய் தந்தையாரிடம் இருந்து (பெற்றோரிடமிருந்து) பிள்ளைகள் உடலியல், உளவியல், மனவெழுச்சி ஆகிய இலட்சணங்களைப் பெற்றுக்கொள்வதை பரம்பரை எனக் குறிப்பிடலாம். இப் பரம்பரைக்குரிய காரணிகள் பிள்ளையின் தந்தையினுடைய அல்லது தாயினுடைய இயல்பாகத் தான் இருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை. மூன்று அல்லது நான்கு தலை முறையினருக்கு முற்பட்ட இயல்புகள் கூட இவ்வாறு பரம்பரை ரீதியாகப் பெற்றுக் கொள்ளப்படலாம்.

ஒரு குழந்தையானது தாயின் கருவறையில் கரு முட்டையாக உருவெடுக்கும் போதே தன் தாய் தந்தையாரிடம் இருந்து சில முக்கிய பண்புகளைக் குரோமோசோன்களின் வழியே பெறுகிறது. தாய், தந்தையாரின் குரோமோசோன்கள் இணையும் போது அவற்றிலுள்ள ஜீன்கள் கரு நிலையிலுள்ள குழந்தை என்னென்ன பண்புகளோடு வளரும் என்பதை நிர்ணயித்துவிடுகின்றன

எமது உடற் கலங்களில் காணப்படுகின்ற குரோமோசோன்களிலுள்ள DNA என அழைக்கப்படும் சேத மூலக் கூறுகளின் ஊடாகவே தலைமுறை இயல்புகள் கடத்தப்பட்டு வருகின்றன. இதனையே பொதுவாக மரபணு என்பர். தலைமுறையுரிமையை அடைகின்ற ஒவ்வொரு இயல்புக்கும் பொறுப்பாகவுள்ள DNA யிலுள்ள பகுதியை ஜீன் (Gene) அல்லது பரம்பரை அலகுகள் எனக் குறிப்பிடுகிறோம். DNA மூலக் கூற்றில் பல நூற்றுக்கணக்கான பரம்பரை அலகுகளைக் காணமுடியும்.

கிரிகர் மெண்டல் என்னும் பேரறிஞர் பரம்பரை இயலில் பல பரிசோதனைகளை நடத்திப் பல உண்மைகளைக் கண்டுபிடித்துள்ளார். அவர் ஜீன்களை இரண்டாக வகுக்கின்றார்.

**○ ஆதிக்கமுள்ள ஜீன்கள்**

ஆதிக்கமுள்ள ஜீன்களால் தோற்றுவிக்கப்படும் பரம்பரை அலகுகள் அடுத்தடுத்த சந்ததிகளில் அதிகரித்துக் கொண்டே போகும்.

**○ பின்னொதுங்கும் ஜீன்கள்**

இத்தகைய ஒதுங்கும் ஜீன்களால் உண்டாகும் மரபு நிலைப் பண்புகள் பின்பு வரும் சந்ததிகளில் குறைந்தே காணப்படும் - என்கிறார்.

அறிவுத் திறன் பரம்பரையாக வருவது என கால்டன் கண்டார். டிரையன் என்பவர் பல சோதனைகளை நடத்தி கற்றல் திறனில் மரபு நிலையின் பங்கினை விளக்கியுள்ளார். ஷாஸ்டர் (Schuster), எல்லிஸ் (Ellis), உட்ஸ் (woods) போன்ற பலரால் பல ஆராய்ச்சிகள் நடத்தப்பட்டு ஒருவனது அறிவுத் திறன் பெருமளவு அவனுடைய மரபு நிலைப்பட்ட இயல்பே என நிறுவப்பட்டுள்ளது.

தோலின் நிறம், சிகையின் தன்மை, கண்மணியின் நிறம் போன்றவை மட்டுமல்லாது ஒருவரது உயரம், நிறம் போன்ற உடலியல் தன்மைகளிலும் பரம்பரைக் காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்றன.

இதுபோல் ஒரு பிள்ளையின் இயல்புகள், குணாதிசயங்கள், துலங்கல் முறை போன்ற தன்மைகளிலும் பரம்பரைக் காரணிகள் பங்கு வகிக்கின்றன. சில வேளைகளில் சந்ததி, சந்ததியாகக் கடத்தப்படுகின்ற அல்லது பிறப்பின் போது உருவாகின்ற சில நோய்களும் மூளையைப் பாதித்து அதன் மூலம் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன.

நல்ல பரம்பரையில் தோன்றும் குழந்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தைகள் நல்ல முறையில் வளரும். இழிந்த குடும்பத்தில் தோன்றும் குழந்தைகள் எவ்வளவு சிறந்த சூழ்நிலையில் வளர்க்கப் பட்டாலும் தமது பரம்பரைப் பண்புகளைக் கொண்டே வளர்வர். பன்றித் தோலி லிருந்து பட்டுடுப்பை செய்ய முடியாது. அது போலவே இழி குடும்பங்களில் இருந்து உயர் பண்புகளைப் பெற்ற குழந்தைகள் தோன்றமாட்டா என மரபுநிலைவாதிகள் கூறுவர்.

ஒரு கரு முதலில் தாயின் கருப்பை யாகிய சூழலில் வளர்கிறது. தாயின் உண வூட்டம், சுரப்பிகளின் தொழிற்பாடு ஆகி யன கருவின் வளர்ச்சியைப் பாதிக்கும் காரணிகளாகும். குழந்தை பிறந்த பின் புறச்சூழற் காரணிகள் பல்வேறு வகைப் பட்டுள்ளமையால் அவை பலவகை விளைவுகளைக் கொடுக்கும்.

**சூழற் காரணிகள்**

கரு உருவாகும் வேளையிலே பரம் பரை இயல்புகள் தீர்மானிக்கப்படுகின் றன. எனினும், பிள்ளையின் சூழல் விரி வடையும் போக்கில் அவையும் மாற்ற மடைகின்றன. ஆரம்பத்தில் நிலையாக உள்ள பரம்பரை இயல்புகள் வளர்ச்சிப் போக்கில் சூழலின் தாக்கங்களினால் மாற்றமடைகின்றன. பிறந்த பின்னர் அவர் களில் ஏற்படும் மாற்றங்கள் முழுக்க, முழுக்க சூழலின் வேறுபாட்டின் விளை வாகவே இருக்கும்.

ஒருவன் பிறந்து வரும் சூழ்நிலையை யும் மரபுநிலையையும் போன்றே சூழலும் அவனது வளர்ச்சியில் பங்குகொள்கின் றது. ஒருவனது வளர்ச்சியையும், நடத்தை யையும் அவனுக்குப் புறம்பாயிருந்து கட் டுப்படுத்தும் பலவித ஏதுக்கள் **சூழ்நிலை** எனப்படும். அதாவது பிள்ளைகள் வாழும் இடத்தைச் சுற்றியிருக்கும் பௌதீக, உயிரியல் கூறு களின் தொகுதியாகும். இதனுள் குடும்பம், பாடசாலை, கோயில், பொது இடங்கள் என்பன உள்ளடக்கப் படும். பிறப்பு முதல் இறப்பு வரை ஒருவ னைப் பாதிக்கும் எல்லா வகைத் தூண் டல்களின் தொகுப்பும் சூழ்நிலைக்குள் அடங்கும்.

சிறுவரின் உளநலத்தில் சூழற் காரணி கள் பெருமளவில் செல்வாக்குச் செலுத்து கின்றன. குழந்தைகள் பாரம்பரியமான இயல்புகளோடு பிறந்தாலும் குழந்தைகளி லிலே அவ்வியல்புகளை வளர்த்தெடுத் தல், அவ்வியல்புகளை ஒடுக்குதல், புதிய இயல்புகளை உருவாக்கி வளர்த்தெடுத்தல், ஏற்கனவே சூழலினால் உருவாக்கப்பட்ட இயல்புகளைப் பின்னர் மாற்றியமைத்தல் எனப் பலவகைகளில் சூழல் காரணிகள் சிறு வர்களின் கல்வி வளர்ச்சியில் செல்வாக் குச் செலுத்துகின்றன. சிறுவர் கல்வி வளர்ச்சியை மேம்படுத்த வேண்டும் என் பதிலேயே அக்கறை உள்ளவர்கள் குறிப் பாக பெற்றோர், ஆசிரியர்கள் சிறுவர் களோடு தொடர்பான சூழற் காரணிகள் பற்றி அறிந்திருப்பதும் அவற்றை எவ்வாறு சாதகமான முறையில் மாற்றியமைக்க லாம் என்பது பற்றி அறிந்திருப்பதும் அவசி யமாகும்.

சூழல் காரணிகளை இரண்டு வகைப் படுத்தலாம்.

01. உயிரியல் சூழல் காரணிகள்
02. பௌதிக சூழல் காரணிகள்

**உயிரியற் சூழல் காரணிகள்** என்பதிலே தாய், தந்தை, சகோதரர்கள், உறவினர் கள், அயலவர்கள், நண்பர்கள், பாடசா லைச் சமூகத்தினர், சகபாடிக் குழுக்கள் மற்றும் சமூக அங்கத்தவர்கள், செல்லப் பிராணிகள் எனப் பலதரப்புகளும் முக்கி யத்துவம் பெறுகின்றன. இவை தவிர்ந்த வீடு, விளையாட்டிடம், விளையாட்டுப் பொருட்கள், வகுப்பறை, பாடசாலைச் சூழல் போன்ற பொருள் சார்ந்த இயற்கைச் சூழல், செயற்கைச் சூழல் என்பன யாவும் **பௌதிகச் சூழல்** என்பதிலேயே அடங்கு கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயின் வயிற்றினுள் குழந்தையானது வளரும் நிலையிலேயே சூழ்நிலை அதைப பாதிக்கின்றது. இதற்குப் **பிறப்புக்கு முன்னுள்ள சூழ்நிலை** என்பது பெயர். தாய் உண்ணும் உணவின் தன்மை, அவளது உடல் நிலை, உள்ளத்திலெழும் மன வெழுச்சியின் தன்மை போன்ற யாவும் குழந்தையின் பிறப்பு முன் உள்ள சூழ் நிலையில் அடங்குவனவாம். குழந்தை பிறந்த பின் அதைப் பாதிக்கும் சூழ்நிலைச் சக்திகள் பிறப்புக்குப் பின்னான சூழ்நிலை ஆகும். இயற்கை வளம், தட்ப வெப்ப நிலை, குடும்பம், பள்ளி, சமய நிலையங்கள் முதலியவற்றைக் கொண்ட சமூகச் சூழ்நிலை யாவும் அடங்கும்.

ஒருவனுக்குத் தரப்படும் கல்வியும், பயிற்சியும் அவன் வளரும் சூழ்நிலையும் அவனை எவ்விதத்தில் உருவாக்குகின்றனவோ அவ்விதமே அவன் உருப் பெறுகின்றான். அவனது வளர்ச்சியில் மரபு நிலைக்கு அவ்வளவு முக்கிய பங்கு இல்லை என்பது சூழ்நிலைவாதிகின் கருத்துகளாம்.

இவர்களுள் ஒருவரான வாட்சன் என்பர் "என்னிடம் உடல் நலமுள்ள சில குழந்தைகளை ஒப்படையுங்கள். எத் தன்மையுள்ளவர்களாக அவர்கள் வளர வேண்டும் என்றும் முற்கூட்டியே சொல்லி விடுங்கள். இக்குழந்தைகளின் மரபு நிலையைப் பற்றி எனக்குச் சற்றும் கவலை இல்லை. சூழ் நிலையின் உதவி கொண்டே பேரறிஞர்களாகவோ, பெருங்குற்றவாளிகளாகவோ அவர்கள் வளரும்படி செய்து காட்டுகிறேன் என்று இவர் கூறியுள்ளார்.

குழந்தைகள் குற்றவாளிகளாக மாறுவதற்கும் சூழ்நிலை முக்கிய காரணம் என்று ஸிரில் பரிட் (CyrilBurt) கூறியுள்ளார். இழி குடும்பங்கள், வறுமை, கட்டுப்பாடின்மை, கூடாநட்பு ஆகியவை கொண்ட சூழ்நிலையில் வளரும் குழந்தைகள் நெறி பிறழ்வை அடைகிறார்கள் என்று கூறப்படுகின்றது. இது அவர்களது கல்வி வளர்ச்சியைப் பாதிக்கின்றது. மரபுநிலைப் பண்புகள் எவ்வாறு அமைந்திருப்பினும் ஓர் குழந்தையின் அறிவு வளர்ச்சிக்கு அதன் இளம் வயது அனுபவங்கள் சிறப்பாக அமைந்திருத்தல் இன்றியமையாததாகும். ஏனெனில் ஒரு குழந்தையின் அறிவு வளர்ச்சியில் மூன்றில் இரண்டு பங்கு வளர்ச்சி அது 6 வயதை எட்டு முன் ஏற்பட்டு விடும். புளூமின் முக்கிய கருத்து இத்தகைய ஒரு கருத்து விலங்குகள், பறவைகள் ஆகியவற்றின் நடத்தையை ஆராயும் வல்லுநர்களால் முதலில் குறிப்பிடப்பட் டது.

ஆசிரியர்கள் ஆக்க முறைப்பட்ட சிறப்பான சூழ்நிலைச் செல்வாக்குகளுக்கு ஒவ்வொரு குழந்தையையும் எவ்வளவு இளம் வயதில் உட்படுத்த முடியுமோ அவ்வளவு சீக்கிரம் இது செயற்படுத்தப்பட வேண்டும். இதேபோன்று அதனது அந்த வயது அறிவுத் திறமைக்கு அப்பாற்பட்ட மிக மிக அதிக அளவினதான சூழ்நிலைத் தூண்டல்களுக்கு அதனை உட்படுத்துவது தவிர்க்கப்படவேண்டும்.

லாமார்க்கு (Lamarck) என்னும் அறிஞர் கற்றலில் எழுந்த பண்புகளும் மரபு நிலை வழியே பின்வரும் சந்ததிகளுக்குத் தரப்படும் எனக் கருதினார். ஆனால் இக்கருத்தை இன்று பெரும்பாலானோர் ஒப்புக் கொள்வதில்லை. வெயிஸ்மென் போன்ற அறிஞர்களின் ஆராய்ச்சிகளி னின்றும் எழுந்த கருத்து பின்வருமாறு பாலணுக்கள் பொதிந்த குணங்களே மரபுவழி வரக்கூடியவை. சூழ்நிலையிலெழுந்த பண்புகள் உடல் அணுக்களைச் சார்ந்தவையாதலால் அவை தாமாக அடுத்த தலைமுறைக் குழந்தைகளிடம் பரவுவதில்லை. அக்குழந்தைகள் இவற்றை மறுபடியும் சுயமுயற்சியால் கற்கவேண்டும். இதுவே இன்றைய பரம்பரையியல் அறிஞர்களின் கருத்தாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகத்தின் ஒவ்வொரு தலைமுறைக்கும் கல்வி அவசியமாகின்றது. கல்வி மூலம் ஒருவன் பெறும் பயன்கள் அவனது அடுத்த தலைமுறைக்கு நேரகச் செல்வதில்லை ஆயினும் அடுத்து வரும் தலைமுறையினரின் சமூக மரபுரிமையைக் கல்வி அதிகமாக்கவே செய்கின்றது. சமூகத்தில் பிறரோடு தொடர்பு கொள்வதன் வழியே இச் சமூக மரபினை ஒருவர் பெறுகின்றார். இச்சமூக மரபுரிமை மக்கட்குள்ளடங்கிக் கிடக்கும் ஆற்றல்கள் வெளிப்பட வாய்ப்பளிக்கின்றது. குழந்தைகளின் மரபு நிலையை ஆசிரியர்களால் உயர்த்த முடியாது போயினும் சிறந்ததொரு சமூக மரபுரிமையைக் குழந்தைகளுக்கு ஆசிரியர்கள் வழங்கலாம்.

ஒரு குழந்தையின் சமூக மரபுரிமைக்குள் சமயம், சமூகம், நாகரிகம் ஆகிய யாவும் இடம்பெறும். இலக்கியங்கள், நுண்கலைப் பொருள்கள், சமூக விதிகள், பழக்கவழக்கங்கள், ஒழுங்கு பற்றி நடைமுறை, அறிவு, சமய உண்மைகள், வாழ்க்கைக் குறிக்கோள் ஆகியவற்றின் திரட்சியே ஒருவனுடைய சமூக மரபுரிமையாகும். இதைப் பாதுகாத்து பின்வரும் சந்ததியார்களிடம் ஒப்படைப்பது கல்வியின் சிறப்பான நோக்கங்களுள் ஒன்றாகும்.

பரம்பரை, சூழல் ஆகிய இரண்டும் தனித்தனியே இயங்க முடியாதவை. இவற்றில் எது மற்றயதைவிடச் சிறந்தது என விவாதிப்பது ஆசிரியர்களைப் பொறுத்த மட்டில் பயனற்றதாகும். உயர்ந்த மரபு நிலையையும், ஒத்த சூழ்நிலையையும் ஒருங்கே பெற்றவனே வாழ்க்கையில் விளக்கம் பெறுவான். பொதுவாகக் கூறின் ஒருவன் என்ன செய்கிறான் என்பதைச் சூழ்நிலையும் நிர்ணயிக்கின்றன எனலாம்.

ஆசிரியர்களால் ஒரு குழந்தையின் மரபுநிலையை மாற்றவியலாது. எனினும் நல்ல உடற் பழக்கவழக்கங்களைப் பெறுவதன் வழியே வலுவற்ற உடல் நிலையை ஓரளவு சரி செய்வது போன்று பிறப்பிலேயே சிறிது குறைந்த நுண்ணறிவினைப் பெற்றுள்ளோரது நிலையையும், நல்ல சூழ்நிலையானது ஓரளவு மேம்படுத்தும் என்பதனை ஆசிரியர் நினைவில் கொள்ள வேண்டும். சிறந்த குடும்பங்களில் இருந்து வரும் மீத்திறக் குழந்தைகளுக்கு அவர்கள் வளர்ச்சிக்குத் தகுந்த கல்வி வாய்ப்புக்களை ஆசிரியர்கள் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். அதேசமயம் மரபு நிலை ஒன்றையே திறன் அளக்கும் கருவியாகக் கொண்டு கல்வியளித்தலும் தவறு. ஒவ்வொரு குழந்தைக்கும் அது எப்படிப்பட்ட பரம்பரையிலிருந்து வந்ததாயினும் சரி அதனிடம் குடிகொண்டிருக்கும் எல்லா நற்பண்புகளையும் வெளிப்படுத்தக் கூடியதான சிறந்த பள்ளிச் சூழ்நிலையை ஏற்படுத்திக் கொடுத்தல் சிறந்த கல்வி முறை எனப்படுவதாகும். இத்தகைய சூழ்நிலையை உருவாக்குவது நல்லாசிரியர்களின் தலையாய பணியாகும். சூழ்நிலையுடன் பொருந்தி வாழும் நிலையை அடைய வளர்ச்சி ஒருவனுக்கு உதவுகின்றது.

குடும்பம்:

ஓர் வீட்டில் வாழும் கணவன், மனைவி, பிள்ளைகள் இவர்களின் இரத்த உறவுகள் அல்லது இவர்களோடு சேர்ந்து வாழ்பவர்களைக் கொண்ட அமைப்பைக் குடும்பம் என்லாம். பிள்ளைகளின் வளர்ச்சிக்கும், விருத்திக்கும் குடும்பம் என்ற அமைப்பு முக்கியமானதாகும். குடும்ப அங்கத்தவர்களின் அன்பும், ஆதரவும் நெருங்கிய உறவும் பிள்ளையின் ஆரோக்கியமான வளர்ச்சிக்கும், விருத்திக்கும் உதவுகின்றன. சிறந்த ஆரோக்கியமான குடும்பம் ஒன்றில் அன்பும், ஆதரவும் காணப்படும்.

மேலும் சில குடும்பங்கள் முரண்பாடுகளுக்கும், பிரச்சினைகளுக்கும் உட்பட்டுத் துன்பப்படுகின்றன. குடும்பத்தில் உணடாகும் பிரச்சினைகளால் பிள்ளை பாதிப்படைகின்றது. எனவே ஆரோக்கியமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடும்பப் பிள்ளைகள் கல்வி வளர்ச்சி யிலும் ஆரோக்கிய நிலையைக் கொண்டி ருப்பார்கள்.

**பாடசாலைச் சூழல்**

பாடசாலைச் சூழலும், பாடசாலைக்கு வெளியே உள்ள சூழலும் கற்றலுக்கு உகந் ததாக அமைதியாகவும், ஆதரவாகவும் அமைதல் வேண்டும். உதாரணமாக புறச் சூழலில் தொடர்ச்சியான சத்தமும், குழப் பமும் இருந்தால் சுமுகமான கற்பித்தல் தடைப்படும்.

**சமூக சூழல்**

சமூக சூழல் மாணவர்களது கல்வி வளர்ச்சியைச் சீர்குலைக்கின்றது. அதா வது சமூக விரோதச் செயற்பாடுகள், போதைவஸ்துப் பாவனை, மது விற்பனை போன்றவை பாடசாலைக்கு அருகிலோ, மாணவர்களது சமுதாயத்தைச் சார்ந்ததா கவோ இடம்பெறும் பொழுது அவை இடைவேளையில் அல்லது பாடசாலை முடிந்த பின்னர் மாணவர்களைப் பிழை யான திசையில் ஈர்த்துத் தீய பழக்கவழக் கங்களை ஏற்படுத்துவதுடன் அவர்களது கல்வி வளர்ச்சியையும் பாதிக்கச் செய்யும். இதில் இருந்து மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் சூழல் பெறும் முக்கியத்து வத்தை உணரக்கூடியதாக உள்ளது.

எனவே மேலே கூறப்பட்டவற்றில் இருந்து குழந்தைகளின் கல்வி வளர்ச் சிக்கு பரம்பரை, சூழல் ஆகிய இரண்டி னதும் பங்களிப்புகள் இன்றியமையாதன என்பதை அறிந்து கொள்ளக் கூடியதாக இருக்கின்றது.

●

# கலாபூஷணம் அரச விருது -2012




கலைப் பணியை ஆற்றிவரும் கலைஞர்களின் உன்னதமான சேவையினைப் பாராட்டி கலாசார அலுவல்கள் திணைக்களம், கலாசார மற்றும் கலை அலுவல்கள் அமைச்சு, இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் திணைக்களம் ஆகியன ஒன்றிணைந்து கலாபூஷண அரச விருது வழங்கும் வைபவத்தை நடத்தியுள்ளன. இணுவில் மண்ணுக்குப் பெருமை சேர்க்கும் வகையில் ஐவர் கலாபூஷண விருது பெற்றுள்ளனர்.

திரு. மூத்ததம்பி சிவலிங்கம் - இலக்கியத்துறை, திரு. கார்த்திகேசு வைத்தீஸ்வரன் - எழுத்துறை, திரு. உருத்திராபதி பாலகிருஷ்ணன் - இசைத்துறை, திரு. தம்பு சிவசுப்பிரமணியம் - இலக்கியத்துறை, திருமதி சாந்தினி சிவநேசன் - நடனத்துறை ஆகிய விருதுபெற்ற கலைஞர்களுக்கு **'இணுவில் ஒலி'** தனது நல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மங்கையர் மாண்பு

# பாரம்பரிய கலை வளர்ச்சியில் பெண்களின் பங்களிப்பு

- செல்வி வித்தியதரணி விஸ்வநாதன்
(புவியியற்துறை மாணவி, யாழ். பல்கலைக்கழகம்)

பாரம்பரிய கலைகள் எனும்போது, வாய்மொழியாக இருந்து வரும் நாட்டார் பாடல்களிலிருந்து கர்நாடக சங்கீதம், அதோடு இணைந்த கீர்த்தனைகள் உட்பட பாமர மக்களின் கிராமிய நடனங்களிலிருந்து இன்று வளர்ந்து வரும் சாஸ்திரிய நடனங்கள் உட்பட நாட்டுக் கூத்திலிருந்து மேடையேற்றப்படும் சமூக நாடகங்கள் வரை எல்லாமே கலைகளின் அம்சங்களாகும்.

அன்றைய காலப் பகுதியில் பாமர மக்கள் வயல்களில் வேலை செய்யும்போது களைப்பு, சோம்பல் உணராமல் தொடர்ந்து வேலை செய்வதற்காக ஆண்களும் பெண்களும் ஆடிப்பாடி மகிழ்ந்தனர். அது மட்டுமன்றி பிறப்பு முதல் இறப்பு வரை வாழ்க்கையின் ஒவ்வொரு நிகழ்விலும் இடம்பெறும் பாடல்கள் உணர்ச்சிபூர்வமான நாட்டுப் பாடல்களாக இருப்பதை அவதானிக்கலாம். தாலாட்டுப் பாடல் தொடக்கம் கும்மிப் பாடல், நெல்குற்றுப் பாடல், கோலாட்டப் பாடல் என்றும் இறுதியாக இறக்கும்போது ஒப்பாரிப் பாடல் என்றும் அவை அமையும். இவற்றைப் பெண்களே பாடுவார்கள். கிராமப் புறங்களில் இவை இன்றும் வழக்கிலுள்ளன. இது போன்ற பாடல்களை அடியொற்றியே பிற்காலத்தில் எழுந்த பாடல்கள் அமையலாயின.

மருத்துவமனைகள் தோன்றுவதற்கு முந்திய காலத்தில் ஒரு குழந்தை பிறந்ததும், பிரசவத்திற்கு முன் நின்று உதவும் மருத்துவிச்சி என்ன பிள்ளை பிறந்துள்ளது என்பதை ஊரார் அறியும் வண்ணம் பாடல் மூலம் வெளிப்படுத்துவார். அப்பாடலைக் கேட்டதும் பெற்றோரும் உறவினர்களும் குதூகலிப்பர். பிள்ளையைத் தொட்டிலிலோ, ஏணையிலோ நித்திரையாக்கும் போது வீட்டிலுள்ள பாட்டியோ அல்லது நெருங்கிய உறவினர்களோ தாலாட்டுப் பாடுவார்கள். தொடர்ந்து வரும் நாட்களில் தாயே தாலாட்டுப் பாடி பிள்ளையைத் தூங்க வைப்பார். இது கிராமப் புறங்களில் இருந்து வந்த பண்பாட்டு வழக்கமாகும்.

அநேகமாகத் தாலாட்டை ஒரு பெண்ணே பாடுவார். ஆனால் ஒப்பாரிப் பாடல்களை ஊர்ப் பெண்கள் பலரும் கூடி இறந்தவரின் வீட்டிலிருந்தே தம் வீட்டாரின் கவலையை வெளிப்படுத்தியபடி ஒப்பாரியில் காட்டுவர். இது எம் மண்ணின் பாரம்பரியமாகும்.

பாரம்பரிய நடனங்களை நோக்கினால் கரகாட்டம், காவடியாட்டம் , பொய்கால் குதிரையாட்டம், குரங்காட்டம், சீனடி சிலம்படியாட்டம் எனப் பலவகை ஆட்டங்களை இருபாலாரும் இணைந்தும் தனித்தும் ஆடி மகிழ்வர். ஆலயத் திருவிழாக்கள், ஊர்வலங்கள் நடைபெறும் போதும் ஆடலுடன் பாடலும் சிறப்பு நிகழ்ச்சியாக இரு பாலாராலும் நிகழ்த்தப்படும். இவற்றைப் பார்க்க பலரும் உற்சாகத்துடன் அங்கு கூடுவார்கள்.

சிலப்பதிகாரத்தில் மாதவியின் நடனம் பற்றிக் குறிப்பிட்டுக் கூறப்பட்டுள்ளது. தேவதாசிகளால் ஆடப்பட்டு வந்த நாட்டியம் இந்தியாவில் ஸ்ரீமதி ருக்மிணிதேவி அருண்டேல் என்பவரின் முயற்சியால் கௌரவமான பரதநாட்டியம் என்னும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தஸ்தைப் பெற்றது. ஆரம்ப காலத்தில் எமது நாட்டில் சதிர், சின்ன மேளம் என அழைக்கப்பட்டு வந்த நிலையில் அதற்கு கௌரவமான பரதநாட்டிய அந்தஸ்தைப் பெற்றுக் கொடுத்தவர் இணுவில் ஏரம்பு சுப்பையா ஆவார்கள். அவர்களிடம் பரத நாட்டியம் (கற்றவர்கள்) பயின்றவர்கள் பலர் பரதநாட்டியம் கற்பிக்கும் சிறந்த நடன ஆசிரியர்களாகத் திகழ்கின்றார்கள்.

கலாசார அலுவலகள் திணைக்களம், இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக் களம் என்பன இணைந்து 2012 ஆம் ஆண்டு மூன்று நடனக் கலைஞர்களுக்கு கலா பூஷண விருது வழங்கிக் கௌரவம் செய் துள்ளன. திருகோணமலையைச் சேர்ந்த திருமதி சாரதாதேவி ஸ்ரீஸ்கந்தராசா, கொக்குவிலைச் சேர்ந்த திருமதி சாந்தினி சிவநேசன், உரும்பிராயைச் சேர்ந்த திரு மதி பத்மினி செல்வேந்திரக்குமார் ஆகிய கலாபூஷண விருது பெற்ற மூவரும் கலைச் செல்வன் ஏரம்பு சுப்பையாவின் மாணவி கள் என்பது குறிப்பிடத்தக்கது. ஏரம்பு சுப்பையா அவர்களின் மகள் திருமதி சாந் தினி சிவநேசன் கொக்குவிலில் 'கலா பவனம்' என்னும் நாட்டியப் பள்ளியைக் கடந்த நாற்பது ஆண்டு காலமாக நடத்தி வருகின்றார்.

நடனக் கலையைப் பரதசாஸ்திர முறைப்படி கற்பிக்கும் ஆசிரியர்கள் ஆர் வத்துடன் ஈடுபாடு காட்டி வருவதால், பரத நாட்டியக் கலை இன்று பிரசித்தி பெற்றுள் ளது. பெற்றோர் தமது பெண் பிள்ளை களுக்குப் பரத நாட்டியம் கற்பிப்பதில் ஆர் வம் காட்டி வரும் நிலையில் அக்கலை இன்று உலகம் போற்றும் கலையாக பிரசித்தி பெற்றுள்ளது. இதன் காரணமாக வும், கால மாற்றத்தில் ஏற்பட்ட கலை ஆர் வத்தாலும் இன்று இசை, நடனம், நாடகம் ஆகிய கலைகள் புத்துயிர் பெற்று வளர்ந்து வருகின்றன.

சாஸ்திரிய கலைகளான சங்கீதம், பரத நாட்டியம் போன்றவற்றுடன் பாரம்பரியக் கலைகளான கரகம், காவடி, கும்மி, கோலாட்டம் போன்ற நடன வகைகளும் நாட்டார் பாடல்களும் பலராலும் விரும்பப் படுவதால் இக் கலைகளுக்கு இப்பொழுது பெருமை ஏற்பட்டுள்ளது. கிராமிய நடனங் களும், கிராமிய மெட்டுக்களுடன் அமைந்த வில்லிசைப் பாடல்களும் தமிழ்த்தினப் போட்டிகளுக்காகப் பாடசாலை மட்டத்தில் உருவாக்கம் பெற்று, கோட்டமட்டம், வலய மட்டம், மாவட்ட மட்டம், மாகாண மட்டம், அகில இலங்கை மட்டம் வரை சென்று விருதுகள் பெறும் அளவில் முன் னேற்றகரமான மாற்றம் ஏற்பட்டுள்ளது.

இணுவில் திருவூரில் அன்று தொட்டே இப்பாரம்பரியக் கலைகள் வளர்ந்து வரு கின்றன. இவற்றுக்கு எம்மூதாதைர்களின் அர்ப்பணிப்பே முக்கிய காரணமாக அமைந் துள்ளமை வெளிப்படை. பல கலைகளி லும் முன்னணிக் கலைஞர்கள் பலரை தன்னகத்தே கொண்ட பெருமை எமது ஊருக்குண்டு. முற்காலத்தில் எமது ஊர் ஆலயங்களில் நடைபெறும் பெரு விழாக் களின் போது விடிய விடிய இப்பாரம்பரியக் கலைஞர்களின் ஆடலும் பாடலும், பாட லும் கூத்தும் பிற ஊர் மக்களையும் கவர்ந் திழுக்கும் சிறப்புடன் நடைபெற்று வந்துள் ளன. ஆலய விழாக்கள் தவிர்ந்த பொது மேடைகளில் நாட்டார் பாடல்கள் பாடுவது, கிராமிய நடனங்களை ஆடுவது போன்ற வற்றுடன் நாட்டுக் கூத்துக்களும் இரவு காலங்களில் நடைபெறும். நடிகர்களில் ஆண்களுடன் ஒரு சில பெண்களும் பங்கேற் றுள்ளனர். அவர்களுள் திருமதி சந்திரா சரவணமுத்து பிரபல்யமானவராக இருந் துள்ளார்.

எம் பாரம்பரிய கலைகளை வளர்க்கும் நோக்கில் எமது ஊரிலுள்ள இராமநாதன் கல்லூரி, இணுவில் மத்திய கல்லூரி, இணுவில் இந்துக் கல்லூரி ஆகிய மூன்று தரம் வாய்ந்த கல்விக் கூடங்கள் செயற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


பட்டு வருகின்றன. மாணவர்களுக்கு இக் கலைகளில் நன்கு தேர்ச்சியும், சிறப்புப் பட்டமும் பெற்ற ஆசிரியர்கள் தமது திறமையால் அவர்களின் பங்களிப்பை வழங்கி வருகின்றார்கள். எமது மாணவர்கள் சிறப்படைய ஊக்கம் கொடுத்து வருகின்றார்கள்; மேடைகளில் அவர்களின் நிகழ்ச்சிகளை அரங்கேற்றியும் வருகின்றார்கள்.

மேலும் போட்டிக்குத் தயார்ப்படுத்தி வலய, மாவட்ட, மாகாண, தேசிய மட்டத்தில் விருதுகள் பெற்று எமது மண்ணுக்கு பெருமை சேர்த்து வருகின்றார்கள். இப் போட்டிகளில் பெண் பிள்ளைகளின் பங்களிப்பே மேலோங்கிக் காணப்படுகின்றது. அநேகமாகப் பெண்பிள்ளைகளே ஆண் வேடம் பூண்டு கிராமிய நடனங்களான உழவர் நடனம், அருவி வெட்டும் நடனம், வாள் நடனம் போன்றவற்றில் தமது திறமையைக் காண்பித்து வந்துள்ளனர். அன்றைய கால கட்டத்தில் வில்லிசையில் ஆண்களே பிரகாசித்தனர். இன்று பெண்களும் வில்லிசையில் சிறந்து விளங்குகின்றனர். மேலும் கரகம், காவடி, கும்மி, கோலாட்டம் ஆகிய கலைகளிலும் தமது முத்திரையைப் பதித்து வருகின்றனர். பரத நாட்டியத்துடன் இசைவாக கரகம், காவடி மெருகேற்றப்பட்டு ஆடி வருகின்றார்கள். பரத நாட்டியம் இன்று மிகப் பிரபல்யம் பெற்று விளங்குகிறது.

அது மட்டுமன்றி இசைத்துறையிலும் பெண்கள் பெரும் பங்காற்றி வருகின்றார்கள். வாய்ப்பாட்டு, வீணை, வயலின், மிருதங்கம், ஓகன் ஆகிய துறைகளிலும் தமது திறமைகளை வெளிக்காட்டி வருகின்றார்கள். யாழ். பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைப்பீடம் எமது ஊரிலேயே அமைந்துள்ளமையால் எமது ஊரைச் சேர்ந்தவர்கள் அதில் இணைந்து கலைகளைக் கற்று வருகின்றனர். பலர்கற்று வெளியேறி ஆசிரியர்களாகவும் விரிவுரையாளர்களாகவும் பணியாற்றி கலைகளை வளர்த்து வருகின்றார்கள். கல்விக் கூடங்கள் மட்டுமல்ல, கலைக்கூடங்களும் எமது ஊரின் சிறப்பை எடுத்துக்காட்டுவனவாக அமைந்துள்ளன.

நாங்கள் எமது திறமையை நிலைநாட்டி ஒரு மனதோடு சகல பாரம்பரியக் கலைகளையும் நன்கு கற்றுணர்ந்து ஏனையவர்களுக்கும் இக்கலைகளைப் பரப்பி, எம் மண்ணின் பெருமையை பெண்கள் மூலம் பிரகாசிக்க வைக்க முன்வருவோமாக.!

# சூரிய உதயம்



ஆதவன் காலையில் எழுந்தானே
ஆனந்தப் புள்ளினம் பறந்தனவே
சோலைகள் மீது வண்டினங்கள்
தேனைக் குடித்துப் பறந்தனவே

ஆலயந் தனிலே மணியோசை
டாங் டாங் என்று ஒலித்தனவே
அரோஹரா எனச் சொல்லி
அருளோடு பக்தர்கள் எழுந்தனரே

ஏர்தனைப் பூட்டி உழவர்களும்
வயல்வெளி நோக்கி நடந்தனரே
அன்போடு காளை மாடுகளும்
உழைப்போடு ஏறுநடை போட்டனவே.

ரஜனி சந்திரலிங்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாடிக்கையாளர்களுக்கு இனிய பொங்கல் வாழ்த்துக்கள்!



சகல வாகனங்களையும் சிறந்த முறையில்


சேவிஸ் செய்துகொள்ள

# அம்பாள் சேவிஸ் ஸ்ரேசன்

# Ambal Service Station














K.K.S. Road,
Maruthanarmadam.

T.P : 0779504535

கே.கே.எஸ் வீதி,
மருதனார்மடம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவராம் பதிப்பகம், 20(32), கல்லூரி வீதி, யாழ்ப்பாணம். தொ.பே. 021 221 9440